Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 20 ஹிஜ்ரி 1428 ஷவ்வால் 03 (06.11.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்:37

## விசேட அதிரடிப்படைக்கு அமெரிக்கா போர் பயிற்சி

கொழும்பு

பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துதல், முக்கியஸ்தர்களின் பாதுகாப்புத் தொடர்பாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு பயற்சியை வழங்க அமெரிக்க போர் பயிற்சி ஆலோசகர்கள் குழு அடுத்த வருட ஆரம்பத்தில் இலங்கைக்கு வரவுள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்க அரச பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு வந்த வேளை மேற்படி பயிற்சி தொடர்பாக விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி- பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெகேயுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து இது தொடர்பாக உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அமெரிக்கா மற்றும் இலங்கை அரசுகளால் விசேட அதிரடிப்படையினருக்கு வழங்கப்படும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கடற்பரப்பில் பாதுகாப்பு தீவிரம்!

கொழும்பு

விடுதலைப்புலிகளுக்கு கப்பல் மூலம் ஆயுதங்கள் வருவதாகக் கிடைத்த தகவலை அடுத்து வடபகுதி கடற்பகுதியில் படையினர் தமது கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன் கடற்புலிகள், கடற்பகுதியில் பயிற்சி நடவடிக்கைகளையும் மேற் மேற்கொள்வதாக படையினருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து இராணுவத்தினரும், கடற்படையினரும் கடற்கரைப்பகுதிகளில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ உளவாளி ஒருவர் திருமலையில் சுட்டுக்கொலை!

திருகோணமலை

திருகோணமலையில் இராணுவத்திற்கு தகவல் வழங்கும் உளவாளி ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்றிரவு சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றிரவு 8.30 மணியளவில் திருகோணமலை டொக்யாட் வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் துரைராஜா கண்ணன் (வயது 32) என்ற இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

டொக்யாட் வீதியில் உள்ள நகைக்கடை ஒன்றின் முன்னால் இவர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளையே சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் இராணுவத்தினருக்கு தகவல் வழங்குபவர் எனவும் கூறப்படுகிறது.

கிழக்கு மாகாண கடற்படைத் தலைமையகத்தின் நுழைவாயிலுக்கு சற்றுத்தொலைவிலேயே இந்தச் சம்பவம் இடம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ரணிலின் கருத்துக்களுக்கு பின்னால் தமிழருக்கெதிரான பாரிய அரசியல் சதி!



## எச்சரிக்கிறார் க.வே.பாலகுமாரன்

கிளிநொச்சி

தமிழ் மக்கள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தெரிவித்து வரும் கருத்துக்களின் பின்னணியில் பாரிய அரசியல் சதித்திட்டம் உள்ள தென்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரான க.வே.பாலகுமாரன் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது - (12 ஆம் பக்கம் பார்க்க)

## அலரி மாளிகையை சூழ நேற்று மாலை தேடுதல்!

கொழும்பு

பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் இராணுவ குண்டு செயலிழக்கும் பிரிவினர் நேற்று பிற்பகல் தேடுதல் நடத்தினர்.

கொள்ளுப்பிட்டி றெசிடா காடின்ஸில் குண்டொன்று வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே. (12 ஆம் பக்கம் பார்க்க)

## துணைப்படைகளின் ஆயுதங்களை

## 12 அமைச்சர்களுடன் ரணில் இரகசிய ஆலோசனை!

# துணைப்படைகளின் ஆயுதங்களை அரசு உடனடியாக களைய வேண்டும்!

## கண்காணிப்புக்குழு மீண்டும் கோரிக்கை

கொழும்பு —

அரச கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் படையினருடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக் குழுக்களிடம் இருந்து - ஆயுதங்கள் உடனடியாகக் களையப்படவேண்டும் என, இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மீண்டும் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் பேச்சாளர் ஹெலன் ஒலவ்ஸ் டோட்ரயர் தகவல் வெளியிடுகையில்-

படையினருடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக் குழுக்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கெதிராகவும், நாட்டின் சட்டங்களுக்கு எதிராகவும் செயற்பட்டு வருகின்றன.

இராணுவப் பகுதிகளில் அரசாங்கமும், விடுவிக்கப்படாத பகுதிகளில் விடுதலைப் புலிகளுமே அந்தப் பிரதேசங்களின் பாதுகாப்பு நிலைமைகளுக்குப் பொறுப்பு. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கான (12 ஆம் பக்கம் பார்க்க)

# 12 …
# இரகசிய ஆலோசனை!

கொழும்பு —

அரசாங்க அமைச்சர்கள் 12 பேருடன் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க - இரகசிய ஆலோசனை நடத்தியிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தகவல் கசிந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

அமைச்சரவை அந்தஸ்து கொண்ட 5 அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் 7 பேருடனும் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் இந்தப் பேச்சுக்களை நடத்தினார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல் மற்றும் அதன் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் பற்றி இரகசியப் பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க தனித்தனியாகவும் குழுக்களாகவும் இந்த அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் சந்தித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் (12 ஆம் பக்கம் பார்க்க்)

# மீடின் கொலை குற்றச்சாட்டுக்கு புலிகள் பதிலளிக்கமாட்டார்கள்!

## தயா மாஸ்ரர் தெரிவிப்பு

கொழும்பு —

இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரி கேணல் ரிஸ்லி மீடின் கொலை தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்காமல் அமைதி காப்பதென விடுதலைப்புலிகள் முடிவுசெய்திருப்பதாக - கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகளின் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்ரர் தெரிவித்ததாக கூறி வெளியிட்டிருக்கும் இந்தச் செய்தியில்-

ரிஸ்லி மீடின் கொலை தொடர்பாக எம்மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு நாம் பதிலளிக்கப்போவதில்லை. அரசியல் படுகொலைகளுக்கு எம்மீது குற்றஞ்சாட்டுவது வழமையாகிவிட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி சந்திரிகாவின் பிரியாவிடை உரை!

கொழும்பு —

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 15 ஆம் திகதி தொலைக்காட்சியில் விசேட பிரியாவிடை உரை நிகழ்த்தவுள்ளார்.

ஜனாதிபதி பொறுப்பிலிருந்து அவர் ஆற்றும் கடைசி உரையாக இது இருக்கும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு, சமாதான முயற்சி மற்றும் பொருளாதார அபிவிருத்தி உட்பட பல விடயங்கள் தொடர்பாக (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி தேர்தலுக்குப் பின் பேச்சுக்கள் ஆரம்பமாகும்!

## ஹான்ஸ் பிரட்ஸ்கர் நம்பிக்கை

கொழும்பு —

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என தாம் நம்புவதாக, இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

தற்போது சமாதானப் பேச்சுக்களிலும், போர் நிறுத்த உடன்படிக்கையிலும் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசும் - விடுதலைப் புலிகளும் போர் நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் (12 ஆம் பக்கம் பார்க்க)


(APC) ஆனந்தா பிறைவேற் கிளினிக்

(M.B.B.S) எம்.பி.பி.எஸ். வைத்தியர்களினால் சகல மருத்துவ சேவைகளும் ஆய்வுகூட சேவைகளும் வழங்கப்படுகின்றன.

தொலைபேசி: 021-222 8144

173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

ஆலோசனை நேரம்:
(திங்கள் - சனி) காலை 6.00- இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 - காலை 10.00
மாலை 5.00 - இரவு 9.00



(C/4385)



ஊடகவியலாளர் கனகரவியின் பொங்கு தமிழ் நூல் அறிமுக விழா நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.
பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - மங்கள விளக்கை நாடாளுமன்ற உறுப்பினர் ம.கா. ஈழவேந்தன் ஏற்றிவைத்தார். நூலின் அறிமுக உரையை ஆசிரியர் ஆர்.கே.மேனனும் மதிப் பீட்டுரையை எழுத்தாளர் பொன்.கணேசமூர்த்தியும் சிறப்புரையை சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கமும் நிகழ்த்தினர்.
நூலின் முதல் பிரதியை நூலாசிரியரிடமிருந்து மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் பெற்றுக்கொள்ள சிறப்புப் பிரதியை நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பெற்றுக்கொண்டார்.

# தமிழர் அபிலாஷையை கொச்சைப்படுத்தும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்போம்!

## தீவக பொது அமைப்புக்கள் அறிக்கை

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயக அபிலாஷை கோரிக்கையை கொச்சைப்படுத்தும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணித்து தமிழ்மக்களின் ஒற்றுமையை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் பயன்படுத்த வேண்டும் என தீவக பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து தீவக பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சிங்கள தேசத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் தமிழர் தமது நிலைப்பாட்டை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமது ஒட்டுமொத்த ஒற்றுமையின் மூலம் - 22 தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து வெளிப்படுத்தினர்.

சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ்த் தேசிய இனத்தை அழிப்பதென்பதில் முழுமையான ஈடுபாட்டுடன் பல்வேறு வழிமுறைகளையும் கையாண்டு வருகின்றது. இலங்கையின் அரசியல் யாப்பு பேரினவாதத்தை நிலைநிறுத்தஉருவாக்கப்பட்டது.

தமிழ் பேசும் மக்களை ஒடுக்கும் நடைமுறைகள் வகுத்து உருவாக்கப்பட்ட யாப்பு வஞ்சகப் பொறியே!

சிங்கள அரசியல் கட்சிகள் பேரினவாதத்தை மையப்படுத்தி - தமிழ் பேசும் மக்களின் கௌரவத்தை, இருப்பை, பாதுகாப்பை, சுதந்திரத்தை, அடிப்படை உரிமைகளை புறக்கணித்துள்ளன. தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக ஒதுக்கப்படுகின்றார்கள். இனியும் சிங்களத்திடம் இருந்து எதிர்பார்ப்பது என்ன ?

கடந்த காலத்தில் சிங்கள அரசியல் தலைவர்களால் தமிழன் ஏமாற்றப்பட்ட வரலாறாக அமைந்துவிட்டது. இனியும் நாம் ஏமாறலாமா? எமது இரத்தம் சிந்திய போராட்ட வரலாறு இன்று ஒரு முக்கியமான கட்டத்திற்கு வந்துவிட்டது. மறுக்கப்பட்ட எமது இறைமையை, எமது பாரம்பரிய தாயகத்தை, சுயநிர்ணய உரிமையை நாம் எட்டும் காலம் வந்துவிட்டது. இந்தவேளையில் ஜனாதிபதித் தேர்தலில் நாம் வாக்களிப்பது தமிழ் பேசும் மக்களது அபிலாஷைகளை கொச்சைப் படுத்துவதாக அமையும். எனவே எமது ஒற்றுமையை சர்வதேசத்திற்கு மீண்டும் ஒருமுறை தெரியப்படுத்துவோம்.

ரணில், மகிந்த ஆகிய இருவருக்கும் இடையில் பேரினவாதத்தை யார் நிலைப்படுத்துவது? அதில் வல்லவர் யார் என்பதே போட்டியாக இருக்கிறது.

இந்த ஜனாதிபதித் தேர்தல் எவ்வகையிலும் தமிழ் பேசும் மக்களது வாழ்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை. போர்நிறுத்த உடன்படிக்கைக் காலத்தில் நடைபெற்ற ஆறு சுற்றுப்பேச்சுவார்த்தையின் போதும் எந்தவொரு முடிவும் எட்டப்படவில்லை.

சிறான் கட்டமைப்பு, சுனாமி அனர்த்த புனர்வாழ்வு பொறி அமைவு முதலியன நடைமுறைப்படுத்த முடியாமல் முடக்கப்பட்டன. முன்னைய உடன்படிக்கைகள் போன்றே இவையும் பேரினவாதிகளால் முடக்கப்பட்டன.

சமாதான பிரியனாக தன்னைக் காட்டும் ஜனா திபதி வேட்பாளர் ரணில் -

கிழக்குப் பிராந்தியத்தில் நவீன பொலீஸ்படை உருவாக்கல்( வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்காக).

சிறந்த - நவீன இராணுவத்தை உருவாக்குவது.

எல்லைப்புற கிராமங்களில் இருக்கும் சிங்களவருக்கு ஆயுதங்களைக் கொடுத்தல்.

சமஷ்டி குறித்து தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதுவும் குறிப்பிடாமை.

எந்த தீர்வுக்கான முடிவு எட்டப்பட்டாலும் அபிப்பிராய வாக்கெடுப்புக்கு விடப்படும். அதாவது சிங்கள பெரும்பான்மையே முடிவு எடுக்கும் எனத் தெரிவித்துள்ளார்

இனவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்த பிரமர் மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் -

தமிழருக்கு தனியான தாயகப் பிரதேசம் இல்லை. ஒற்றையாட்சிக்குள் தீர்வு.

சுனாமி பொதுக்கட்டமைப்பை இரத்துச்செய்தல். அபிப்பிராய வாக்கெடுப்பு ஆகியவை குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இனவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்த தமிழ் குழுவின் கொள்கைப் பிரகடனத்தில் -

மத்தியில் கூட்டாட்சி. வடக்கு-கிழக்கு பிரிக்க முடியாத சுயாட்சி என்ற பேரினவாதிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் காணப்படாத - ஏற்றுக்கொள்ளப்படாத வார்த்தைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

எனவே இந்த ஜனாதிபதித் தேர்தலை புறகணித்து எமது ஒற்றுமையை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லூர் பிரதேச பாடசாலைகளில் இருந்து
# இடைவிலகிய மாணவர்களை மீண்டும் சேர்ப்பதற்கு ஏற்பாடு!

யாழ்ப்பாணம் ——

நல்லூர் பகுதியில் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்விகற்று இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் சிறுவர் உரிமைகள் அமைப்பு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

கடந்த சில வாரங்களில் மட்டும் தரம் 6 முதல் தரம் 9 வரை கல்வி கற்று இடைவிலகிய 14 மாணவர்கள் மீண்டும் பாடசாலையில் இணைக்கப்பட்டு கல்விகற்று வருகின்றனர்.

இந்தப் பகுதியிலுள்ள ஏனைய இடைவிலகிய மாணவர்களின் விபரங்களை கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் உதவியுடன் சேகரித்து வருகின்றோம் என அந்த அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அளவெட்டிவடக்கு-பத்தானை என்ற முகவரியில் வசிக்கும் ஆறுமுகம் கஜேந்திரன் ஆகிய நான் நேற்றுமுன்தினம் 04.11.2005 வெள்ளி பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து அளவெட்டி சென்ற பஸ்ஸில் என்று NOKIA 5310 ரக கையடக்க தொலைபேசியை தவறவிட்டு விட்டேன்.

இதனைக் கண்டெடுத்தவர்கள் நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தயவு செய்து ஒப்படைத்து உதவவும்.
(சி4813)

### வீடு வாடகைக்கு

காங்கேசன் சாலையில் (மாநகர எல்லைக்குள்) காரியால பாவனைக்கு ஏற்ற 45' X 10' பரப்பளவுடைய மேல் மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
விளம்பர இல. -45, நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி4804)

மனோகரா யாழ்ப்பாணம்
யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக DIGITAL dts SOUND ஒலிநயத்துடன் இளைய தளபதி விஜய் வெடிக்கும்

சிவகாசி
விசேட காட்சி காலை 8.30 மணிக்கு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
தனுஷ், பிரியாமணி
அது ஒரு கனாக்காலம்
இசை:இளையராஜா
கதைவசனம்:பாலுமகேந்திரா
காட்சிகள்;-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜெயம் புகழ் ரவி, ஸ்ரேயா நடித்த
மழை
காட்சிகள் 11.00, 2.45, 5.00 (புதிய நேரம்)
விசேட காட்சியாக ரஜனி, சிவாஜி, அம்பிகா நடித்த
படிக்காதவன் 9.00 மணி (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
விக்ரம், அசின்
மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
மஜா
காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின தீபாவளி வெளியீடு
ஸ்ரீகாந், சோனியா அகர்வால், நமீதா, வடிவேலு நடித்த

பம்பரக்கண்ணாலே
காட்சிகள்:-11.00,3.00,7.00, 9.30, 1.00 (பு.நே)


நல்லூர் லயன்ஸ் கழகம்
நல்லூர் முத்த விநாயகர் சனசமூக நிலையத்துடன் இணைந்து வழங்கும்
இலவச மருத்துவ முகாம்

இடம் : நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்
காலம : 06.11.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி

மேற்படி முகாமில் கண்பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும், நீரழிவு நோய்ப்பரிசோதனை, இரத்த அழுத்தப்பரிசோதனை என்பன மேற்கொள்ளப்படும்.

தலைவர், நல்லூர் லயன்ஸ் கழகம்
IIS City Campus, 181 Navalar Road , Jaffna.

விளம்பர அனுசரணை :
R.G. STORES
Dealers of Fancy Goods. Stationary. Presentation Items & Needle work Items
51, Racca Road, Jaffna.
(C/4805)

61 ஆவது அகவையிலே...
வாழ்த்துகின்றோம்

திருமதி பவானிதேவி யோகீஸ்வரன்

திருமதி பவானிதேவி யோகீஸ்வரன் அவர்கள் தமது அறுபத்தோராவது பிறந்த தினத்தைக் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை ஏழாலை மடாலய கருணாகரப் பிள்ளையார் திருவருளால் இன்னும் பல்லாண்டு காலம் ஆண்டவன் துணையோடு வாழ வாழ்த்துபவர்கள்,

ஓங்காரகுமரன் - சுதர்மதி
சுகந்தன் - மருதா
கோகுலன்
அபிராமி.

06.11.2005

வாழ்க இறைவன் நாமத்துடன்

ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
தகவல்: யோ.கோகுலன்
(C/4812)

# வட - கிழக்கில் நீதியான தேர்தல்; பத்து யோசனைகள் முன்வைப்பு!

கொழும்பு —

வடக்கு - கிழக்கில் பக்கச்சார்பற்ற தேர்தல் நடைபெற, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க முன்வைத்த யோசனைகளுக்கு வேட்பாளர்களின் செயலாளர்களும், பிரதிநிதிகளும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்த யோசனைகளையே வடக்கு - கிழக்கில் தேர்தல் நடத்தப்படுவது குறித்து தொடரப்பட்டுள்ள வழக்குக்கான அறிக்கையாக நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அவர்கள் ஒப்புதல் கொடுத்துள்ளனர்.

இதன்படி வடக்கு - கிழக்கு வாக்காளர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்தும் பொறுப்பு கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

தேர்தல் ஆணையாளர் முன்வைத்திருக்கும் யோசனைக்கமைய வாக்களிப்பு நிலையத்துக்கு வரும் வாக்காளர் முதலில் தங்களின் பெயரை வாக்களிப்பு நிலையத்தில் இருக்கும் அதிகாரிகளுக்கு கூறவேண்டும். அத்துடன் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தங்களின் குடும்ப அங்கத்தவர்களின் பெயர்களையும் கூற வேண்டும். இதற்கு முன்னர் வாக்களிப்பு நிலையத்தில் இருக்கும் அதிகாரி வாக்காளரின் பெயரைக் கூறி அழைக்கும் முறையே இருந்தது. இந்தப் புதிய நடைமுறையினூடாக மோசடி வாக்குப் பதிவு இடம் பெறுவதைத் தவிர்க்க முடியும் என நம்பப்படுகிறது.

வடக்கு - கிழக்கு வாக்களிப்பு நிலையங்களில் அந்த பிரதேசங்களைச் சேர்ந்த அதிகாரிகளை நியமிக்காது, வெளியிடங்களிலிருந்து அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.

இந்த வாக்களிப்பு நிலையங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

வடக்கு - கிழக்கில் வாக்களிப்பதற்கென வரும் வாக்காளர்களின் தொகை கணக்கெடுக்கப்படுவதால் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை பற்றிய அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ள முடியும்.

வாக்களித்த பின்னர் எந்தவொரு வாக்காளரும் தேவையற்ற முறையில் அங்கு நடமாட அனுமதிக்கப்படமாட்டார்.

வாக்களிப்பு நிலையத்திற்குள் நுழைதல் மற்றும் வெளியேறுதல் ஒரு ஒழுங்குமுறைக்கு அமைய மேற்கொள்ளப்படும்.

வாக்களிக்க வரும் வாக்காளர்களில் வயது குறைந்தவர்களாகக் காணப்படுபவர்களிடம் அவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அவர்களிடம் பொலிஸ் விசாரணைகளை மேற்கொள்வதற்கு இடமளிக்கப்படும்.

வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக வந்து செல்ல போக்குவரத்து ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும். வாக்களிப்பு நிலையத்துக்குள் வாக்காளர்கள் வரும் நேரம் குறிக்கப்படும். அதன்படி வாக்களித்தல் நேரம் கணக்கெடுக்கப்படும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலேயே கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும். ஆகியனவே அந்த யோசனைகளாகும்.

# ஜே.வி.பியினரின் பிரசாரங்கள் குறித்து ஐ.தே.கட்சி கடும் கண்டனம்!

கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு சேறு பூசும் வகையில் விமல் வீரவன்ச தலைமையில் ஜே.வி.பியினர் யானை - புலி எனும் தலைப்பில் பிரசுரங்களை மக்களிடம் விநியோகிக்க ஆயத்தமாகியுள்ளனர் என்று ஐ.தே.க.பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டினார்.

ஊடகவியலாளர்களிடம் இது குறித்து அவர் கூறியதாவது -

ரணில் விக்கிரமசிங்கவிற்கு அவதூறை ஏற்படுத்தும் வகையில் ஜே.வி.பியினரும் கூட்டணி அரசாங்கத்தில் சிலரும் செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். மகிந்த ராஜபக்ஷவும் இதனை அறிந்துள்ளதாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

2004 ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்படிக்கையைக் கிழித்தெறியவேண்டும் என்றது ஜே.வி.பி. இன்று போர்நிறுத்த உடன்பாட்டைத் திருத்த வேண்டும் என மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்.

போர்நிறுத்த உடன்படிக்கையில் ஒருதரப்பினர் மட்டுமே திருத்தங்களைச் செய்யமுடியாது என்ற யதார்த்தத்தை மஹிந்த ராஜபக்ஷ புரிந்துகொண்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி முன்வைத்துள்ள மக்கள் நிகழ்ச்சி நிரலை தேர்தலுக்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷ புரிந்துகொள்வார் என நம்புகிறோம் என திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார்.

# வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் போராட தீர்மானம்!

கொழும்பு —

மகிந்தவின் சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறைவேற்றமுடியாத வாக்குறுதிகளை வரவு செலவுத் திட்டத்தில் இணைத்து நாடாளுமன்றில் சமர்ப்பித்தால், நாடாளுமன்றிலும், அதற்கு வெளியேயும், கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்க்கட்சிகளின் கூட்டணி தீர்மானித்துள்ளது.

இவ்வாறு வாக்குறுதிகளுடன் கூடிய வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுமாக இருந்தால்- அதற்கெதிராக நாடாளுமன்றில் நடத்தப்படவுள்ள எதிர்ப்புப் போராட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இணைத்துக்கொள்ளப் போவதாக ஐ.தே.கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

தேசிய நிதி அறிக்கையில் அரசியல் ஏமாற்று வித்தைகள் பயன்படுத்தப்படுவதனை எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(தே)

# வடக்கு பகுதி வாக்குகளைவிடவும் தெற்கின் வாக்குகளே பலமானவை

## மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு —

தெற்கில் உருவாகப்போகும் ஜனாதிபதி ஒருவர் குறித்து மக்கள் அவதானத்துடன் பார்த்துக் கொண்டிருப்பதாகப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தலகமவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் -

வடக்கின் வாக்குப் பலத்தை விட தெற்கின் வாக்குப் பலம் பலமாக உள்ளது. எனது வெற்றி இந்த நாட்டின் வெற்றி, பிளவுபடாத நாடொன்றின் வெற்றி என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நினைவு படுத்துகின்றேன்.

இன்று முழுநாடும் தெற்கைப் பார்த்துக்கொண்டிருக்கின்றது. தெற்கில் உருவாகப் போகின்ற ஜனாதி பதிக்காக தெற்கு மக்கள் எந்த விதத்தில் செயலாற்றப்போகின்றார் என அனைவரும் நோக்கு கின்றனர்.

இன்று சிலர் வடக்கின் வாக்குகளைப் பெறுவதற்காகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். நாம் தெளிவாகக் கூறுகின்றோம் வடக்கின் வாக்குகளைவிட தெற்கின் வாக்குகள் பலமானவை எனத் தெரிவித்தார்.

# படையினரின் சோதனை நடவடிக்கை போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் செயல்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

கொழும்பு —

மட்டக்களப்புப் பகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கடுமையான சோதனை நடவடிக்கைகள் போர்நிறுத்த உடன்பாட்டை மீறுகின்ற செயல் என்று கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இது தொடர்பாகக் கூறியதாவது -

இராணுவம் மற்றும் பொலிஸார் மேற்கொண்ட இந்தக் கடுமையான சோதனை நடவடிக்கையானது பாரிய யுத்தநிறுத்த மீறல், அடிப்படை மனித உரிமை மீறல் நடவடிக்கையேயாகும். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள சூழ்நிலையில் இது போன்ற நடவடிக்கைகளை இராணுவம் மேற் கொண்டிருப்பதை ஏற்கமுடியாது.

எமது விசனத்தைத் தெரிவிக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சுக்குக் கடிதம் ஒன்றை அனுப்புகிறோம். இராணுவத்தின் இத்தகைய நடவடிக்கையால் மட்டக்களப்பு மக்களிடத்தில் அச்சமும் பீதியும் ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு மாமாங்கம், ஜயந்திபுரம், இருதயபுரம் மற்றும் ஊறணி பிரதேச மக்களை பொது மைதானத்தில் நிற்க வைத்து இராணுவமும் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுவினரும் கடும் சோதனைக்குள்ளாக்கினர்.

இராணுவச் சீருடையுடன் முகமூடி அணிந்து சோதனை நடவடிக்கைகளைச் செய்த ஆயுதக் குழுவினர் 20 தமிழ் இளைஞர்களையும் இராணுவத்திடம் காட்டிக்கொடுத்தனர். அவர்கள் அனைவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையின்போது ஆயுதங்களைக் கைப்பற்றியதாக இராணுவத்தினரும் பொலிஸாரும் தெரிவித்தனர்.

### 5 ஆயிரம் கண்காணிப்பாளர்கள்

ஜனாதிபதி தேர்தலில் உள்ளூர் மற்றும் சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் 5 ஆயிரம் பேர் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் சார்பில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குப் பகுதியில் ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் 30 கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுவர் என்றும் ஒரு செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

# வெலிக்கடை, மகசீன் சிறைச்சாலைகளை வெளிப்பிரதேசத்துக்குக் கொண்டு செல்லமுடிவு

இலங்கையின் சிறைச்சாலை முறைமைகள் முழுவதுமாக மாற்றத்திற்கு உட்படுத்தப்படுவதால், கொழும்பிலுள்ள வெலிக்கடை மற்றும் மகசீன் சிறைச்சாலைகளை கொழும்பிற்கு வெளியேயுள்ள பிரதேசத்துக்குக் கொண்டு செல்வதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகச் சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மர்சூன் தெரிவித்துள்ளார்.

பாதாள குழுச் சந்தேக நபர்களை நீதிமன்றுக்குக் கொண்டு செல்லும்போது, பாதுகாப்பிற்காக தனியான வாகனங்களையும், விசேட பயிற்சி பெற்ற சிறைச்சாலை அதிகாரிகளையும் பணியில் ஈடுபடுத்த அரசு தீர்மானித்துள்ளது.

சிறைச்சாலையில் நிலவும் அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், சிறைச்சாலை அதிகாரிகள் மட்டத்தில் திடீர் சுற்றிவளைப்புப் பிரிவை ஆரம்பிப்பதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னான்டோவுடன் சிறைச்சாலை ஆணையாளர் கலந்துரையாடவுள்ளார்.(தே)

# திருமலை படை அதிகாரியையும் ஐஸ்மஞ்சு குறிவைத்தாராம்!

இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரியான மீடின் கொலையின் பிரதான சந்தேக நபரான ஐஸ்மஞ்சு ஒரு மாதத்திற்கு முன்னர் திருமலையில் இராணுவ அதிகாரியொருவரின் நடமாட்டங்களை உளவுபார்த்ததாக பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஞாயிறு பாடசாலை மாணவர்களுக்கு உரை நிகழ்த்திக் கொண்டிருக்கையில் முச்சக்கர வண்டியில் அங்குவந்த ஐஸ் மஞ்சு அவரை உளவுபார்த்திருக்கிறார்.

இதனை அவதானித்த இராணுவ அதிகாரியின் பாதுகாவலர்கள் ஐஸ் மஞ்சுவைப் பின் தொடர்ந்த போது அவர் தப்பியுள்ளார்.

சில காலங்களுக்கு முன்னர் கொட்டாவப் பகுதிக்கும் ஐஸ் மஞ்சு வந்திருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர்.

# ஜே.வி.பியின் போட்டிக்குழுவினர் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவு!

கொழும்பு —

ஜே.வி.பியின் போட்டிக் குழு (விகல்ப கந்தாயம்) ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பிலான ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் ஹெப்பிட்டிக்கொலவைசாகதனசங்கராகசமித்தி அரங்கில் நடைபெற்றது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டுக்கு போட்டி ஜே.வி.பியின் ஒருங்கிணைப்பாளர் மிகிர உடுமுல்ல தலைமைவகித்தார். ஜே.வி.பியின் போட்டிக் குழுத்தலைவரான ஆர்.பி. பிரேமச்சந்திர கடும்தாக்குதலுக்குள்ளாகியிருந்தார். அவர்மீது ஜே.வி.பியினர் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

ஊடகவியலாளர் மாநாட்டில் ஆர்.பி.பிரேமச்சந்திர கூறியதாவது -

ரயில்வே துறையில் ஊழியராகக் கடமையாற்றினேன். 1988 தொடக்கம் 89 காலப் பகுதியில் கண்டி மாவட்ட ஜே.வி.பியின் நடவடிக்கைக் கொமாண்டராகப் பொறுப்பு வகித்தேன். (அதற்கான அடையாள அட்டையை வெளியிட்டார்) ஜே.வி.பியின் தொழிற்சங்கத்தில் இருந்ததால் இந்த அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டேன்.

ஜே.வி.பி அமைப்பிலிருந்து இதுவரை நான் நீக்கப்படவில்லை. றோகண விஜேவீர மறைவுக்குப் பின்பு கட்சியின் பொதுச் செயலாளரான விமல் வீரவன்ச உறுப்பினர் அடையாள அட்டைகளை வழங்கவில்லை.


றோகண விஜேவீரவின் பாதையில் செல்பவர்களாக ஜே.வி.பியினர் இருந்தால் கட்சிக்குள் வர்க்க பேதம் இருக்கக் கூடாது. அமைச்சுப் பொறுப்புக்களுக்காக மோதிக்கொள்ளக் கூடாது. எம்மீது நீதிமன்றில் தாக்குதல் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது உண்மையே.

ஜே.வி.பியின் அடிப்படைக் கொள்கைகள் இப்போது கைவிடப்பட்டுவிட்டன. இப்போது இருப்பது உண்மையான ஜே.வி.பி அல்ல, இது கலப்பின ஜே.வி.பி. நாட்டின் மிகப்பெரிய நகைச்சுவையாளர்களாக ஜே.வி.பியினர் உள்ளனர். அவர்கள் பாதுகாப்புக் கூண்டுக்குள் இருந்து கொண்டு பேசுகிறார்கள். விலை உயர்ந்த உடைகளோடும் கைத்தொலைபேசிகளோடும் வாழ்க்கை நடத்துகிறார்கள்.

இந்த அமைப்பை விகல்ப கந்தாயம் 3 பேருடன் தான் தொடங்கினோம். ஆனால் இப்போது நாம் மக்கள் இயக்க மாக உள்ளோம் என்றார் பிரேமச்சந்திர.

### மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட்

# இரண்டாவது இனிங்ஸிலும் பொண்டிங் சதம்



பிறிஸ்பேர்ன் —

அவுஸ்ரேலிய அணியுடனான பிறிஸ்பேர்ன் டெஸ்ட் போட்டியின் - முதல் இனிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 216 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் 435 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தில் முதல் இனிங்ஸை தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆட்டநேர முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 182 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்த நிலையில் நேற்று மூன்றாவது நாள் ஆட்டம் தொடர்ந்தது. ரம்டீன் 12 ஓட்டங்களுடனும், பவல் 4 ஓட்டங்களுடனும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

ஆனால், ஆட்டம் தொடங்கிய சற்று நேரத்திலேயே - ஸ்கோர் 187ஆக இருந்தபோது - பவலின் விக்கெட்டை வோன் வீழ்த்தினார். 25 பந்துகளில் ஒரே ஒரு பவுண்டரியை அடித்ததன் மூலம் 4 ஓட்டங்களை மட்டுமே பெற்றார்.

அடுத்து வந்த எட்வேட்ஸும் வோனின் பந்தில் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோது - ஸ்கோர் 204ஆக இருந்தது.

இதன்பின்னர் 210 ஆக ஸ்கோர் இருந்தபோது அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுகளைப் பிடுங்கினார் வோன். கொலிமோரும், லோசனும் ஓட்டமெதையும் பெறாமல் பவிலியன் திரும்ப

**விளையாட்டு**



மேற்கிந்தியத் தீவுகள் அணி 77 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்த ரம்டீன் 76 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 37 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

பந்துவீச்சில் வோன் 5, மக்ரா 4, லீ 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இதையடுத்து அவுஸ்ரேலிய அணி நேற்று இரண்டாவது இனிங்ஸ் ஆட்டத்தைத் தொடங்கியது. ஹூசே - ஹைடன் ஜோடி தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். ஸ்கோர் 71 ஆக இருந்தபோது - ஹூசே ஆட்டமிழந்தார்.

கைலின் பந்துவீச்சில் கொலிமோரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர் 65 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 29 ஓட்டங்களை எடுத்தார்.


அடுத்து ஹைடன் - பொண்டிங் ஜோடி விளாசித் தள்ளி ஓட்டங்களைக் குவித்தது. இருவரும் சதம் அடித்தனர். ஸ்கோர் 258ஆக உயரும் வரை இந்த ஜோடியைப் பிரிக்க முடியாமல் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்துவீச்சாளர்கள் பெரிதும் திணறினர்.

இரண்டாவது விக்கெட்டாக ஹைடனை, கைல் வீழ்த்தினார். 163 பந்துகளில் 10 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 118 ஓட்டங்களை இவர் அடித்தார்.

அடுத்து பொண்டிங் - கிளார்க் ஜோடி நிலைத்து நின்று ஆடியது. நேற்றைய ஆட்டநேர முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 283 ஓட்டங்களை அவுஸ்ரேலிய அணி பெற்றிருந்தது.

பொண்டிங் 158 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 104 ஓட்டங்களுடனும், கிளார்க் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# துலீப் கிண்ண கிரிக்கெட் போட்டி; 14 ஓட்டங்களில் கங்கூலி ஆட்டமிழப்பு



மும்பை —

துலீப் கிண்ண கிரிக்கெட் போட்டி மும்பை மற்றும் அவுரங்காபாத்தில் நடைபெற்று வருகிறது. மும்பையில் நடைபெறும் போட்டியில் கிழக்கு மண்டல அணியும், சிம்பாப்வே பிரசிடென்ட் அணியும் மோதி வருகின்றன. இதில் கங்கூலி கிழக்கு மண்டல அணியின் கப்டனாக உள்ளார்.

3 நாட்கள் கொண்ட இந்தப் போட்டியின் முதல்நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் தொடங்கியது. முதலில் களமிறங்கிய சிம்பாப்வே பிரசிடென்ட் அணி 156 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

அதன்பின் கிழக்கு மண்டல அணி முதல் இனிங்ஸை தொடங்கியது. இந்த அணியில் இடம் பெற்றிருந்த அரிந்தம் தாஸ் 80 ஓட்டங்களிலும், எஸ்.எஸ்.தாஸ் 61 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். கங்கூலி 4ஆவது வீரராகக் களமிறங்கினார்.

உணவு இடைவேளை வரை கங்கூலி 29 பந்துகளைச் சந்தித்து 14 ஓட்டங்களை எடுத்திருந்தார். இதில் 3 பவுண்டரிகள் அடங்கும். இடைவேளை முடிந்து ஆடவந்த கங்கூலி வந்த வேகத்திலேயே ஆட்டமிழந்தார். கிரமரின் பந்துவீச்சில் பெரேராவிடம் பிடிகொடுத்து 14 ஓட்டங்களுடன் வெளியேறினார். கங்கூலி அணி 3 விக்கெட் இழப்புக்கு 211 ஓட்டங்களை எடுத்திருந்தது.

# டெஸ்ட் போட்டிக்கான டிக்கெட்டுக்களை இலவசமாக வழங்குகிறது பாகிஸ்தான்

கராச்சி —

கிரிக்கெட்டுக்கு இருக்கும் ஆர்வம் மற்ற விளையாட்டுக்கும் இருக்கவேண்டும் என்பது பெரும்பாலானோரின் வாதம். ஆனால், பாகிஸ்தான் ரசிகர்கள் அதைப் புரிந்துகொண்டார்களோ அல்லது வேறு என்ன காரணமோ தெரியவில்லை, டெஸ்ட் போட்டிகளில் அவர்கள் அதிகம் தலைகாட்டுவதில்லை.

ஆனாலும் போட்டி அமைப்புக் குழுவினர் விடுவதாயில்லை.

எதிர்வரும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரின்போது மொத்த டிக்கெட்டில் கால்பகுதியை இலவசமாகக் கொடுத்து அவர்களை இழுக்க முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

இங்கிலாந்து அணி 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் ஆட்டங்களில் பாகிஸ்தானுடன் விளையாடவுள்ளது. முல்டான், பைசலாபாத், லாகூர் ஆகிய இடங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இவ்விடங்களில் போட்டி தொடங்கும் முதல் நாள் பிரத்தியேக கவுண்டர் அமைத்து, ரசிகர்களுக்கு இலவசமாக டிக்கெட்டுக்களை வழங்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

சமீப காலங்களில் டெஸ்ட் போட்டிகளைக் காண ரசிகர்கள் அதிக ஆர்வம் காட்டுவதில்லை. அதிகப்படியான பாதுகாப்பு உள்ளிட்ட காரணிகளும் அதற்கு காரணம். அதனால் ரசிகர்களுக்கு இலவசமாக டிக்கெட்டைக் கொடுத்து கூட்டத்தைத் திரட்ட முயற்சி மேற்கொண்டுள்ளோமென பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் செய்தித் தொடர்பு அதிகாரி அத்தீப் அப்துல்ராப் கூறியுள்ளார்.

ஆட்டத்தைப் பார்க்க முக்கிய பிரமுகர்களுக்கு இலவசமாக பாஸ் வழங்கும்போது, அதே மாதிரியான சலுகையை ரசிகர்களுக்கும் ஏன் வழங்கக்கூடாது. அதே சமயம் ஒருநாள் ஆட்டங்களுக்கும் இதே மாதிரி இலவச அனுமதியை ரசிர்கள் எதிர்பார்க்கக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை-இந்திய அணிகளிடையேயான 5ஆவது போட்டி இன்று அகமதாபாத்தில்

## பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்




அகமதாபாத் —

இந்திய - இலங்கை அணிகளிடையே நடைபெற்று வரும் ஒருநாள் போட்டித் தொடரின் 5ஆவது போட்டி இன்று குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் பகல் - இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது. இதற்காக இரு அணிகளும் அகமதாபாத் நகருக்குச் சென்றன. நேற்று அவர்கள் பயிற்சியில் ஈடுபட்டனர்.


அகமதாபாத் அடிக்கடி மதக் கலவரம் நடைபெறும் நகரம் என்பதாலும், தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் உள்ள இடம் என்பதாலும் - மைதானத்திலும் வீரர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மைதானத்தில் 48 ஆயிரம் பேர் அமரும் அளவுக்கு வசதிகள் உள்ளன. இதை பகுதி, பகுதியாக பிரித்து பாதுகாப்பு வசதிகளை செய்துள்ளனர்.

சிறப்பு அதிரடிப்படை, வெடிகுண்டு நிபுணர்கள், பொலிஸ் மோப்ப நாய்கள் குழு ஆகியவையும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பார்வையாளர்களின் நடவடிக்கைகளைத் துல்லியமாக கண்காணிப்பதற்காக ஆங்காங்கே கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. ரசிகர்கள், தண்ணீர் போத்தல், உணவுப் பொதி ஆகியவை கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# கங்கூலியை அணியிலிருந்து நீக்க சரத் பவார் குழு காரணமில்லையாம்!



மும்பை —

இந்திய கிரிக்கெட் அணியில் கங்கூலி மோசமாக விளையாடி வந்தாலும், அவர் கப்டனாக நீடித்து வந்ததற்கு இந்திய கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் ஜக்மோகன் டால்மியாதான் காரணம் என்று கூறப்பட்டது. டால்மியாவும் கொல்கத்தாவைச் சேர்ந்த கங்கூலிக்கு ஆதரவாகச் செயற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் மகேந்திரா மற்றும் தெரிவுக் குழு உறுப்பினர்களில் பலர் டால்மியாவின் ஆதரவாளர்கள். இதனால்தான் கங்கூலி இவ்வளவு காலமும் அணியில் நீடித்து வந்ததாகக் கூறப்பட்டது. ஆனால், கங்கூலி மீது பயிற்சியாளர் கிரேக் சப்பல் புகார் கூறியதாலும், அவர் தொடர்ந்து மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதாலும் கங்கூலிக்கு எதிரான பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுத்தன.

இருந்தாலும் அவரை டால்மியா குழு காப்பாற்றிவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கங்கூலி அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

இதற்கு டால்மியாவின் எதிர்க் குழுவான சரத்பவார் குழு கொடுத்த நெருக்கடிதான் காரணம் என்று கூறப்பட்டது. ஆனால், இதை முன்னாள் கிரிக்கெட் சங்கத் தலைவரும், சரத்பவார் குழுவைச் சேர்ந்தவருமான இந்தர்ஜித் சிங் பிந்த்ரா மறுத்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது -

கங்கூலி கொல்கத்தா அரசியலில்தான் சம்பந்தப்பட்டு இருந்தாரே தவிர, கிரிக்கெட் சபை அரசியலில் அவருக்கு சம்பந்தமில்லை. அவரின் விவகாரத்தில் நாங்கள் தலையிடவும் இல்லை. தெரிவுக் குழுவில் இருந்த 5 பேரில் 4 பேர் டால்மியாவின் ஆதரவாளர்கள். எனவே கங்கூலியின் நீக்கத்துக்கு அவர்கள்தான் காரணம்.

எங்களுடைய குழு என்றைக்குமே கிரிக்கெட் வீரர்களை சங்க விவகாரங்களில் தலையிட அனுமதித்ததில்லையெனத் தெரிவித்தார்.

# பாரிஸ் மாஸ்டர்ஸ் ரெனிஸ்; காலிறுதிப் போட்டியில் ரொடிக்

பாரிஸ் —


பாரிஸ் மாஸ்டர்ஸ் ரெனிஸ் போட்டியில் அமெரிக்க வீரர் அன்டி ரொடிக் காலிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் அவர் 6-1, 6-2 என்ற செட் கணக்கில் ஸ்லோவாக்கிய வீரர் டொமினிக்கைத் தோற்டிகத்தார்.

இன்னொரு ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் பெரார் 6-2, 6-7, 6-3 என்ற செட் கணக்கில் ஜேர்மனி வீரர் டாமியை வீழ்த்தினார்.

காலிறுதிப் போட்டியில் அன்டி ரொடிக்கும், பெராரும் மோதவுள்ளனர். கடந்த ஆண்டு பாரிஸ் மாஸ்டர்ஸ் பட்டத்தை வென்றவர் அன்டி ரொடிக் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பிலடெல்பியாவில் அட்லாண்டா ரெனிஸ் சம்பியன்ஷிப் மகளிர் ரெனிஸ் போட்டி நடை பெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் பிரான்ஸ் வீராங்கனை அமலி மௌரிஸ்மோ காலிறுதிப் போட்டிக்கு



முன்னேறினார். அவர் இந்த ஆட்டத்தில் 6-3, 6-4 என்ற செட் கணக்கில் ஜப்பான் வீராங்கனை சுகியாமாவை வீழ்த்தினார். மௌரிஸ்மோ ஏற்கனவே 2003ஆம் ஆண்டும், 2004ஆம் ஆண்டும் இந்த அட்லாண்டா சம்பியன்ஷிப் பட்டத்தை வென்றவர் ஆவார்.

# கராச்சியில் இரு போட்டிகளில் இந்திய அணி விளையாடும்!

## பாகிஸ்தானுக்கு உறுதியளிப்பு

லாகூர் —

கராச்சி நகரில் ஒரு டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் கட்டாயம் விளையாடுவோமென பாகிஸ்தானுக்கு இந்திய கிரிக்கெட் சபை உறுதியளித்துள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரியில் 40 நாள் சுற்றுப்பயணமாக இந்திய அணி, பாகிஸ்தான் செல்கிறது. அங்கு மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டிகளில் விளையாடும். இதற்கான போட்டி அட்டவணையை பாகிஸ்தான கிரிக்கெட் சபை ஏற்கனவே அளித்துள்ளது. இதை மத்திய அரசின் ஒப்புதலுக்காக இந்திய கிரிக்கெட் சபை அனுப்பியுள்ளது. அட்டவணைப்படி, மூன்றாவது டெஸ்ட், ஐந்தாவது ஒருநாள் போட்டி சர்ச்சைக்குரிய கராச்சி நகரில் நடத்தப்படவுள்ளது.

கடந்த ஆண்டு பாகிஸ்தான் சென்ற இந்திய அணி தீவிரவாத அமைப்புகள் அதிகமுள்ள கராச்சியில் ஒருநாள் போட்டியில் மட்டுமே விளையாடியது. இம்முறை டெஸ்டிலும் பங்கேற்கவேண்டுமென பாகிஸ்தான் கேட்டுக்கொண்டுள்ளது. இதற்கு இந்திய கிரிக்கெட் சபை அதிகாரிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர். பாகிஸ்தான் அனுப்பியுள்ள அட்டவணைக்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதில் நாங்கள் எந்த மாற்றமும் செய்ய விரும்பவில்லை என இந்திய கிரிக்கெட் சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தொடர் முடிந்ததும் ஆசிய கிண்ணப் போட்டி பெப்ரவரி 16ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் ஓமான் அணிகள் பங்கேற்கவுள்ளன.

மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கும் பட்சத்தில் அடுத்த ஆண்டு முதல் திகதியில் இந்திய அணி லாகூரில் இருக்கலாம்.








பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்று நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறையின் வெள்ளிவிழா நிகழ்வில்- பேராசிரியர் கௌரவிப்பு நடைபெற்றது. இந்த நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழக சமூகவியற்றுறைத் தலைவர் - பேராசிரியர் சோ.சந்திரசேகரம், யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் சபா ஜெயராஜ் ஆகியோருக்கு யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் மோகனதாஸ் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், நினைவுப் பரிசை வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 2 பொது மண்டபங்கள் அமைப்பு

சுதுமலை

நிகொட், யு.என்.டி.பி நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புடன் - நல்லூர் பிரதேச செயலக எல்லைக்குள் இரண்டு பொது மண்டபங்கள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரியாலை கிராம சேவையாளர் பிரிவில் பொது மண்டபமும், வீதி புனரமைப்பும் நிகொட் நிறுவன நிதிப்பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்,

வண்.வடமேற்கு கிராம சேவையாளர் பிரிவில் யு.என்.டி.பி நிறுவனத்தால் அமைக்கப்பட்டுவரும் பொது மண்டபம் மிக விரைவில் வேலைகள் பூர்த்தியாகி, மக்கள் பாவனைக்கு விடப்படவுள்ளதாகவும், இதனால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள் எனவும் நல்லூர் பிரதேச செயலர் திருமதி.எஸ்.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (91)

## சுகாதார சீர்கேடுகள்

சங்கானை

சங்கானை மீன்சந்தை, மரக்கறிச் சந்தை, பஸ்நிலையப் பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய், பூனைகளால் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக - மீன்சந்தைப் பகுதியில் இறைச்சிக்காக வெட்டப்படும் கோழிகள், மாடுகளின் எச்சங்கள் உரிய முறையில் நிலத்தில் புதைக்கப்படுவதில்லை. இதனைக் கிளறி எடுக்கும் நாய்கள் பொது வீதிகளிலும், அக்கம் பக்கம் உள்ள வீடு, வளவுகளிலும் கொண்டு செல்கின்றன. இதனால் துர்நாற்றமும், சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன.

அதேவேளை - இந்தப் பகுதியில் மட்டும் 40 - 50 வரையிலான நாய், பூனைகள் காணப்படுகின்றன.

தற்போது பெய்து வரும் மழையால் மேலும் பல அசௌகரியங்களைப் பொதுமக்கள் எதிர்நோக்குவதால், சம்பந்தப்பட்டவர்கள் இவற்றை அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (48)

## சகலரிடமும் வாசிப்பு பழக்கம் குறைந்தமையாலேயே வாசிப்பு மாதம் பிரகடனப்படுத்தப்பட வேண்டியுள்ளது

யாழ்ப்பாணம்

வாசிப்பு என்பது படித்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்குத்தான் வரும் என்பதல்ல. வாசிப்பைப் பொறுத்தளவில் ஒரு குடும்பத்தில் தாயார் மிக முக்கிய இடம் பெறுகிறார். அவர் நினைத்தால் பிள்ளைகளை படிக்கச் செய்யவும் முடியும். படிப்பை இடைநிறுத்தவும் முடியும். இன்று உலகில் மிக முக்கியமானது எது? உணவு, உடை, உறையுள் என்பதை விடவும், தான் சொல்வதை மற்றவர்கள் கேட்க வேண்டும்.

ஒருவர் - தான் மற்றவர்களால் மதிக்கப்படவேண்டும் என்றே அனைவரும் விரும்புகின்றனர். இதற்குத் தான் அறிவு வேண்டும்.

அறிவுள்ளவர்களையே அனைவரும் மதிப்பர். இந்த அறிவைப் பெறுவதற்கே பரந்தளவிலான வாசிப்பு அவசியம். வாசிப்பதற்கு நேரம் காலம், இடம், வயது என்பது முக்கியமல்ல. எந்தவேளையிலும், எந்த நூலை யாவது வாசிக்கலாம்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, வலி.தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் பொது நூலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட "வாசிப்பும் சமூக மேம்பாடும்'' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கிய யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் ஸ்ரீகாந்தலட்சுமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் வலி.தெற்கு பிரதேச செயலர் திருமதி.சரஸ்வதி சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஏராளமான பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர். தொடர்ந்து அவர் அங்கு கருத்துரை வழங்கும்போது -

ஒரு வருடம் முழுவதும் பாடசாலையில் படிக்கும் பாடப் புத்தகங்களிலிருந்து நாம் அனைத்தையும் கற்றுவிட முடியாது. கற்றது கையளவு கல்லாதது உலகளவு.

எமக்குத் தெரியாதவை ஏராளம் உள்ளன. அவற்றை எங்கே பெறுவது என தெரியாது பலர் தவிக்கின்றனர். கல்லாத உலகளவை வைத்திருப்பதே நூலகங்கள். நூலகத்திலுள்ள புத்தகங்கள் வாசிப்பதற்கே உள்ளன. நூல்கள் பதுக்குவதற்கல்ல, பாவனைக்கே வைக்கப்பட்டுள்ளன.

சில நூலகங்களுக்கு வாசகர்கள் செல்வதில்லை. நூல்களும் புதிதாகவேயுள்ளன. எமது மூதாதையர்கள் பாடசாலை சென்று படித்தது கிடையாது. 5,6ஆம் வகுப்புடன் படிப்பை நிறுத்திவிடுவார்கள். ஆனால், அவர்களிடம் இப்போதுள்ளவர்களின் அறிவைவிட, பல மடங்கு அறிவு காணப்பட்டது. அவர்கள் பல நூல்களையும் வாசித்தார்கள். இதனாலேயே அறிவில் சிறந்து விளங்கினார்கள்.

எனவே, அறிவாளிகளுக்கு வாசிப்பு மாதம் எனும் ஒன்று தேவையில்லை.

வாசிக்க வேண்டுமென்ற உணர்வு வந்துவிட்டால் எப்பொழுதும் வாசிக்கலாம். ஆனால், வாசிப்பு மாதத்தில் பாடசாலை நூலகங்கள் மாணவர்களுக்கு வேண்டிய சேவையைச் செய்யத் தவறிவிட்டன எனத் தெரிவித்தார். (101)

## நீண்டகாலமாக திருத்தப்படாத வெள்ளவாய்க்கால்

சங்கானை

சங்கானை பிரதான வீதியில் அமைந்துள்ள மண்டியக் குளத்துக்கு வந்துசேரும் மழை வெள்ளம், ஓடும் வாய்க்கால் பாதை - கடந்த சில வருடங்களாகத் துப்புரவு செய்யப்படாமலுள்ளது.

சங்கானை நிகரை வீதி, பிரான்பற்று வீதியால் வரும் மழைவெள்ளம் - மண்டியக் குளத்தைச் சென்றடைவதற்கு 10 அடி அகலமான வெள்ள வாய்க்கால் பாதை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த வாய்க்கால் தற்போது புல், செடி, பூண்டுகள் நிறைந்தாகவும், மண் நிரம்பியும் வெள்ளம் ஓடி வழிய முடியாத நிலையில் உள்ளது.

இந்த வெள்ளம் பொது மக்கள் குடியிருப்புப் பகுதியில் தேங்கி நிற்கின்றது. இதனால் நுளம்புப் பெருக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவுள்ளதால், மலேரியா போன்ற நோய்கள் பரவலாம் என மக்கள் அஞ்சுகின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் மேலும் பல சிரமங்களை மக்கள் அனுபவிக்கவேண்டியுள்ளது. (48)

## குடாநாட்டில் எதிர்பார்த்தளவு மழைவீழ்ச்சி ஏற்படவில்லை!

யாழ்ப்பாணம்

குடாநாட்டில் சராசரி மழை வீழ்ச்சிக்கு அமைவாக எதிர்பார்த்த மழைவீழ்ச்சி இது வரை இடம்பெறவில்லை என திருநெல்வேலியில் அமைந்துள்ள காலநிலை அவதானிப்பு நிலையத்தினர் தெரிவித்தனர்.

தற்போதைய குடாநாட்டு மழைவீழ்ச்சி குறித்து தொடர்பு கொண்டு கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

குடாநாட்டின் சராசரி மழை வீழ்ச்சியாக எதிர்பார்ப்பது 1230 மி.மீ மழைவீழ்ச்சியாகும். தற்போது 485 மி.மீ மழை பொழிவே இடம்பெற்றுள்ளது. கடந்த 2 வருடத்துடன் ஒப்பிடுகையில் இது குறைவானதாகும். எனினும், நவம்பர் மாதத்தில் தாழமுக்கம் அதிகம் ஆதலால், இனிவரும் நாட்களில் மழைவீழ்ச்சி அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

இதேவேளை குடாநாட்டில் கடந்த மாதம் 177 மி.மீ மழை பொழிவு பதிவாகியுள்ளது. நவம்பர் மாத தொடக்க தினங்களான - கடந்த 2 ஆம் திகதி 58.8 மி.மீ மழைவீழ்ச்சியும், 3 ஆம் திகதி 8.2 மி.மீ மழைவீழ்ச்சியும், நேற்றையதினம் 18.02 மி.மீ மழைவீழ்ச்சியும் பதிவாகி இருப்பதாகவும் காலநிலை அவதானிப்பு நிலையத்தினர் மேலும் தெரிவித்தனர்.

## மலசல கூடங்கள் அமைக்க யுனிசெவ் நிறுவனம் நிதியுதவி

சுதுமலை

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மலசல கூடங்களை அமைப்பதற்கென யுனிசெவ் நிறுவனம் 20 பயனாளிகளுக்குக் கடன் வழங்கியுள்ளதாகவும், மிகவிரைவில் மலசலகூடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பிரதேச செயலர் திருமதி.எஸ்.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

8 கிராம அலுவலர் பிரிவில் இருந்து பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். யுனிசெவ் நிறுவனம் இதற்கென சுமார் 60 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளதுடன், மக்கள் பங்களிப்பான 10 ஆயிரம் ரூபாவையும் பயன்படுத்தியும், மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச செயலர் எல்லைக்குட்பட்ட - ஜே/101, ஜே/102, ஜே/115, ஜே/165, ஜே/117, ஜே/118, ஜே/125, ஜே/127 கிராம அலுலர் பிரிவுகளிலே மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை - பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிக்கைக்காகக் காத்திருப்பதாகவும், அவை கிடைத்ததும் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நல்லூர் பிரதேச செயலகத்தின் 6 கிராம அலுவலர் பிரிவுகளையும், நல்லூர் பிரதேச சபையில் 2 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடங்கியுள்ளமையால், பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கைகள் பெறவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

## ஒக்ஸ்பாம் நிறுவனத்தால் வீட்டு வன்முறை ஒழிப்புத் திட்டம்

சுதுமலை

ஒக்ஸ்பாம் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் 'எங்களால் முடியும்' எனும் கருப்பொருளைக்கொண்ட, வீட்டு வன்முறைகளை இல்லாது ஒழிப்பதற்கான செயற்பாடுகள் தேசியரீதியில் இடம்பெற்று வருவதாக மாவட்ட திட்ட இணைப்பாளர் சுரேக்கா தெரிவித்தார்.

இந்தச் செயற்திட்டத்தின் வலுவூட்டல் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம், டிசம்பர் 10 ஆம் திகதி வரையான பத்து நாட்கள் நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ளதாகவும், 'வெண்பட்டி' தினமாக இதை அனுஷ்டிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இல்லத்தில் பெண்களுக்கெதிராக இடம்பெறுகின்ற வன்முறைகளைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கையாக மாவட்ட செயற்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, விழிப்புணர்வு செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும், விழிப்புணர்வுக் கருத்துப் பகிர்வு நிகழ்வு - கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இடம்பெற்றுள்ளதாகவும், மிக விரைவில் முல்லைத்தீவில் இடம்பெறவுள்ளதாகவும் ஒக்ஸ்பாம் நிறுவன மாவட்டத் திட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (91)

## துப்பாக்கிச் சூட்டில் ஆடு பலியானது

யாழ்ப்பாணம்

யாழ்.முஸ்லிம் பள்ளிவாசலுக்கு அருகாமையிலுள்ள பொலிஸாரின் மீது இனந்தெரியாதோரால் வீசப்பட்ட குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் ஆடு ஒன்று இறந்துள்ளது.

இதனால் அன்றைய தினம் பள்ளிவாசல் தொழுகை இரவு நடை பெறவில்லை. அந்தப் பகுதியில் இரவு முழுவதும், ஒரே பதற்றத்துடன் காணப்பட்டது. குண்டு வீசப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் தமது காவலரணை மண்மூட்டைகளால் பலப்படுத்தி வருகின்றார்கள்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
அகவை ஐந்து



பெயர் : பா.சிந்தூரி
முகவரி : சங்கத்தானை.






# சிந்தனை சீராக இல்லை


அன்ட்ரு சைமன்ஸ்
நாளை முதல் குடிக்கமாட்டேன்

கிரிக்கெட் உலகின் சக்கரவர்த்தியாக தற்போதும் திகழ்பவர்கள் அவுஸ்ரேலியர்கள் தான் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமிருப்பதில்லை. அது ஆஷஸ் தொடரை இழந்தாலும் கூட. அதேவேளை எதிரணி வீரர்களை மட்டந் தட்டி பேசுவதிலும் அவர்களுடன் வார்த்தையாடல்களில் ஈடுபட்டு சர்ச்சைகளைத் தோற்றுவிப்பதிலும் பெயர் பெற்றவர்கள். இப்போது அவர்களது குறிப்பாக றிக்கி பொண்டிங்கின் வெள்ளைக்காரத் துரைத்தனம் மீண்டும் வெளிப்பட்டுள்ளது.

2003 ஒக்ரோபரில் அவுஸ்ரேலிய அணி TVS முத்தரப்பு ஒரு நாள் தொடரில் பங்கேற்பதற்காக இந்தியா வந்திருந்திருந்த பொழுது, அவ்வணியில் சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோனும், வேகப் பந்து வீச்சாளர் கிளென் மக்ராவும் இடம்பெறவில்லை. ஆனாலும் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த பொண்டிங் - "தாங்கள் எப்போதும் தனிப்பட்ட ஒரு வீரரைச் சார்ந்திருப்பதில்லையெனவும், எந்தப் புதுமுக வீரரையாவது அணியில் உள்வாங்கி எம்மால் வெற்றியைப் பெற முடியுமெனவும்" கூறியிருந்தார். அவுஸ்ரேலிய அணி பொறுத்து அதுதான் உண்மையும், யதார்த்தமும். இதற்கு பல உதாரணங்களை எடுத்துக்காட்டலாம். ஷேன் வோன் இல்லாமலேயே 2003 உலகக் கிண்ணத்தை அவுஸ்ரேலியர்கள கைப்பற்றியது சிறந்த எடுத்துக்காட்டு.

இதேவேளை, இவ்வருடம் ஜுலை மாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற NAT WEST தொடரில் அவுஸ்ரேலிய அணி, தர வரிசையில் கடைசியில் இருக்கும் பங்களாதேஷிடம் ஒருநாள் போட்டி ஒன்றில் படுதோல்வி அடைந்திருந்தது. அன்றைய தோல்விக்கு சுமார் இரண்டு வாரத்துக்கு முன்னர் றிக்கி பொண்டிங் பதிலளித்துள்ளார். தான் எழுதிய "ஆஷஸ் டயரி- 2005" புத்தகத்தில் - அந்தப் போட்டியில் ஆடவிருந்த அன்ட்ரூ சைமன்ஸ் மது அருந்தியதால் அவரை அணியில் சேர்க்கவில்லை எனவும், அவர் விளையாடாததாலேயே அந்தப் போட்டியில் அவுஸ்ரேலிய அணி பங்களாதேஷிடம்தோல்வி கண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



றிக்கி பொண்டிங்
நேர்கொண்ட பார்வை இல்லை

அன்றைய போட்டியில் அன்ட்ரூ சைமன்ஸை தவிர அனைத்து அவுஸ்ரேலிய வீரர்களும் விளையாடியிருந்த போதும், பொண்டிங்கின் தற்போதைய கூற்று முன்னர் கூறிய "தாங்கள் எப்போதும் தனி நபர்களைச் சார்ந்திருப்பதில்லை" என்ற கருத்தியல் நிலைப்பாட்டோடு முரண்பட்டுள்ளமையைக் கண்கூடாக்கிறது.

இதிலிருந்து வெளிப்படையாக ஒருவிடயம் வெளிச்சத்துக்கு வருகிறது. அது வலுக்குறைந்த பங்களாதேஷ் அணியோடு ஏற்பட்ட தோல்வியை அவர்களால் இன்னமும் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை என்பதுதான்.

அந்தப் போட்டியில் வளர்ந்து வரும் பங்களாதேஷ் அணி பெற்ற மகத்தான வெற்றியைப் பாராட்டி, அவ்வணியை தட்டிக் கொடுக்கும் படியான கருத்துக்களைக் கூறாமல், பொண்டிங் சிறுபிள்ளைத்தனமாக வெளியிட்டுள்ள கருத்தானது, அவரின் நடத்தைக் கோலத்தின் பிறழ்வுத் தன்மையையே சுட்டிக்காட்டுகிறதென்றால் அது மிகையில்லை.

— விமலன்

# இதிலும் இவனே முதல்வன்


லாறா
என்னை யாராவது முந்துங்களேன்

பிறைன் லாறாவின் துடுப்பாட்ட சாதனைகள் பிரமிப்பானவை. ஆனால் சுப்ப சீரிஸில் ஒரு துடுப்பாட்ட வீரராக சராசரியாகக்கூட இவர் எதுவும் செய்யவில்லை. அதோடு அவர் சார்ந்த அணி சுப்பசீரிஸ் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியாவிடம் படுதோல்வியடைந்தது. இதனைத் தொடர்ந்து இவரின் சரிவுச் சாதனையொன்றைப் பற்றிப் பேசுகின்றனர் கிரிக்கெட் புள்ளிவிபரவியலாளர்கள்.

உலக டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிகூடிய தோல்விகளைச் சந்தித்த வீரர்களுள் பிறைன்லாறா முதலிடம் பெறுகிறார் என்று எடுத்துக்காட்டுகிறார்கள். இதுவரையில் பிறைன் லாறா விளையாடிய 118 டெஸ்ட் போட்டிகளில் 55 இல் தோல்விகண்டு "தோல்வியில் முதன்மையானவர்" என்ற பெயரைத் தட்டிக்கொள்கிறார் பிறைன் லாறா.

இங்கிலாந்தின் முன்னாள் விக்கெட் காப்பாள ரும், அணித்தலைவராகவும் இருந்த அலெக் ஸ்ருவட்டின் 54 தோல்விகளைப் பின் தள்ளி, முன் செல்கிறார் லாறா. லாறா இப்போது OUT OF FORM என்றாலும் அவரது துடுப்பாட்ட சாதனைக்குப் புறம்பாக இப்படியும் ஒர புள்ளி விபரம்....!!

1990 இல் லாறா சர்வதேச கிரிக்கெட் உலகில் நுழைந்த போது மேற்கிந்திய அணி புகழின் உச்சியில்தான் இருந்தது. ஆனால் இவரின் காலத்திலேயே மேற்கிந்தியத்தீவுகளின் வீழ்ச்சி ஆரம்பித்ததும் ஒரு துரதிஷ்டம் தான்.

லாறாவின் சாதனையான 400 ஓட்டங்கள் அன்ரிகுவாவில் இங்கிலாந்துக்கு எதிராக 2004 இல் எடுக்கப்பட்டது. 1994 இல் டர்ஹம் அணிக்கு எதிராக வோரிக்ஷயர் சார்பில் 501 ஓட்டங்கள் குவித்ததும் ஒரு சாதனை.


அலெக் ஸ்ருவட்
நன்றி லாறா

முன்னதாக 37 வருடங்களின் முன் கிரிக்கெட் சகாப்தம் காபீல்ட் சோபர்ஸ் 364 ஓட்டங்கள் பெற்று தன்வசம் வைத்திருந்த சாதனையை 1994 இல் லாறா 375 பெற்றுத் தன்வசமாக்கினார். ஆனால் 2003 ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் மத்தியூ ஹைடன் சிம்பாப்வேக்கு எதிராக 380 அடித்து லாறாவின் சாதனையைத் தட்டிப் பறித்தார்.

ஆனால் மீண்டும் சில மாதங்களில் 400 ஓட்டங்கள் சேர்த்து லாறா மீண்டும் சாதனையை தன் வசமாக்கிக் கொண்டார். இது மட்டுமல்ல உலக சாதனையாக 11.174 டெஸ்ட் ஓட்டங்களைப் பெற்ற அலன் போடரின் சாதனையை எட்ட லாறாவுக்குத் தேவை இன்னமும் 315 ஓட்டங்களே.


உண்மையில்தான் இப்படியான தரவுகளைத் தன்னகத்தே வைத்திருக்கும் லாறாவுக்கு ஏன் அப்படியொரு தேவையற்ற சாதனை. நீண்ட காலம் களத்தில் நிற்பதால் சாதனைகளும் வரும். தேவையற்ற சோதனைகளும் வரும். என்னதான் செய்ய முடியும்.

—அன்ரனி

# போய்விடு பெண்ணே!

பலவிடயங்களில் பதினெட்டே வயதான சானியா மிர்சா இந்திய நாட்டைப் பொறுத்தவரை முதலிடம் பெற்றுக் கொள்கிறார். முதன் முதலாக WTA மகுடத்தை சானியா வென்றபோது அது முதலிடம். இந்திய வீராங்கனையொருவர் முதல் நூறு இடத்துக்குள் வந்தபோது சானியா மிர்சா முதலிடம். ஒரு இந்திய ரெனிஸ் வீராங்கனை அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டிகளில் நான்காம் சுற்றுவரை முன்னேறியதில் சானியாவுக்கு முதலிடம். உலகின் தரவரிசைப் பட்டியலில் முப்பத்தோராம் இடத்துக்கு பிரமிக்கத்தக்க வேகத்தில் முந்திய இந்தியப் பெண்மணி என்ற வகையில் சானியாவுக்கு முதலிடம். இப்படியாக இந்தப் பதினெட்டு வயதுப் பெண்ணின் முதன்மைகளை வரிசைபோட்டு நிற்க, அவற்றை இடைநிறுத்துவது போல சில சம்பவங்கள் நடைபெறுவது போலவும் தெரிகிறது.

சானியா மிர்சா ரெனிஸ் விளையாடும்போது அணியும் உடையானது மதம் சார்ந்த எதிர்ப்புணர் வொன்றை இந்தியாவில் எழுப்பியுள்ளது. இதன் தொடர்ச்சியாக கடந்த மாதம் கொல்கத்தாவில் நடைபெற்ற WTA ரெனிஸ் போட்டிகளில் கலந்து கொள்ளவந்த போது பாதுகாப்பு நடவடிக்கைகள் அதீதமாக இருந்தது. இது சில வேளை சானியாவைப் பாதித்ததோ என்னவோ, எதிர்பாராமல் முதல் சுற்றிலேயே தோல்வி கண்டு விட்டார் அவர்.


சானியா மிர்சா
புயல் மேற்கு நோக்கி நகரும்

சானியா பொருளாதர வளம் நிறைந்த குடும்பம் ஒன்றில் அவரது ரெனிஸ் விளையாட்டுக்கு ஆக்கம் ஊக்கமும் தரும் பெற்றோரைப் பெற்றுக் கொண்டவர். மறுபுறம் கடந்த மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் தலா ஒவ்வொரு பதக்கமும் பெற்ற இந்திய நாட்டில் பிறந்தவர். அதோடு ஆணாதிக்கம் நிறைந்த, பெண்கள் விளையாட்டுத் துறையில் ஈடுபடுவதை அவ்வளவு ஊக்க மளிக்காத நாட்டில், சமயத் தில் பிறந்தவர் இவர்.




இவருக்கு எதிர்ப்பு எவ்வளவு இருந்தாலும் இவரது விளையாட்டுத் திறமையை மழுங்கடிக்க யாரும் விரும்பமாட்டார்கள். ஒரு இந்திய விமர்சகர் அழகாகப் பின்வருமாறு கூறுகிறார். நியாயபூர்வமான இந்தியன், சானியாவை விளையாட்டுத் துறையில் அதீத திறமை வாய்ந்த ஒரு பெண்மணியாக மட்டும் பார்ப்பான். பதினெட்டு வயதில் உலகத்தை இந்தியா பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த, விஸ்வரூபம் எடுத்த குழந்தையாகப் பார்ப்பான். இதைவிட்டு ஏன் அவரை அதற்கப்பால் பார்க்கிறார்களோ தெரியவில்லை என்கிறார்.

எது எவ்வாறாயினும் இந்தியா பெற்ற தவப்புதல்வி சானியா மிர்சா. இதற்குத் தடையாக கலை, கலாசாரம், மதம், கீழத்தேயப் பண்பாடு, ஒழுக்கம், அடக்கம் என்று ஒரு முரண் ஒழுக்க விதிக் கோவையை அமுல்படுத்த முயற்சிப்பது அநாவசியமானதென்றே தோன்றுகின்றது. ஒரு பேச்சுக்குச் சொன்னால சிலவேளை சானியா மிர்சா அமெரிக்காவில் குடியேற விரும்பினால், வெள்ளை மாளிகை கைநீட்டி வரவேற்று விடும். அதன் பின் சானியா அமெரிக்கப் பிரஜையாக உலகதரவரிசை ஐந்துக்குள் வந்து நிற்பதைப் பார்த்து இந்தியர்கள் லபோ, லபோ என்று அடித்துக்கொள்ள வேண்டிவரும்.

— நிர்மலன்

# தென்னந்தோப்புக் கிளி

ஏய் மலபார், ஏய் மலபார் என்று ஜெயம் ரவி அசினை "எம்.குமரன் சன் ஒப் மகாலக்ஷ்மி" படத்தில் அடிக்கடி அழைத்து மலபார் என்ற சொல்லை எமக்குக் கூடுதலாகவே பதியவைத்தார். அதாவது மலபார் என்பது இந்திய கேரள மாநிலத்தைக் குறிக்கும். இப்பொழுது இதே மலபார் எனும் சொல் இன்னொருவரால் மிகப் பரபரப்பாக பேசப்படுகிறது. இலங்கை - இந்திய முதலாவது ஒருநாள் போட்டியில் புதிய வேகப்பந்து வீச்சாளர் ஒருவரை முதன் முதலில் சர்வதேச அறிமுகமாக பார்த்தபோது இவர்தான் அந்த மலபார் என்று புரிந்தது.


சிறீசாந்த் மலபார் மன்னவன்

இருபத்தியிரண்டு வயதேயான சிறீசாந்த் தனது உயர்ச்சி பற்றி மிக நம்பிக்கையாகவே பேசியிருக்கிறார். ஒரு சந்தர்ப்பத்தில் உள்ளூர் பத்திரிகையாளர்களிடம் பேசும்போது - நான் இந்திய அணிக்குத் தெரிவு செய்யப்படும் போது மீண்டும் என்னிடம் ஒரு பேட்டியை எதிர்பார்ப்பீர்கள் என்றிருக்கிறார். இப்பொழுது அது நடந்துவிட்டது. கேரளா அவ்வளவு அதிகமாக இந்திய தேசிய அணிக்கு வீரர்களைக் கொடுத்த மாநிலம் அல்ல.

ஆனால் சிறீசாந்த் இன்றும், எதிர்காலத்திலும் கேரளாவை இந்தியக் கிரிக்கெட் சபையினர் திரும்பிப்பார்க்க வைத்து விட்டார். இவர் முன்னர் ஒரு முறை சலெஞ்ஜர் தொடரில் HATRIC எடுத்தவர். பல பிரபல்ய கிரிக்கெட் வீரர்களை வீழ்த்தியவர்.

தான் - கடந்த ஒரு சில வருடங்களாகவே இந்திய தேசிய அணித்தெரிவாளர்களிடம் இருந்து அழைப்பு வரும் என்று எதிர்பார்த்ததாகக் கூறுபவர் தனக்கு அழைப்பு வந்ததும் தன்னால் நம்பவே முடியவில்லையென்பவர் - சச்சின் டெண்டுல்கருடன் இணைந்து தான் மைதானத்தில் இறங்கினேன் என்பதை இன்னமும் கூட என்னால் நம்பமுடியவில்லை என்கிறார்.

இவரது குடும்பமே புகழ்வாய்ந்த குடும்பம். இவரது ஒரு சகோதரி நிவேதிதா தொலைக்காட்சி நடிகை. இவரது அத்தான் ஒரு பிரபல்ய பாடகர். "பார்த்தீபன் கனவு" திரைப்படத்தில் இடம் பெற்ற "கனாக் கண்டேனடி" பாடலைப் பாடிய மதுபால கிருஷ்ணன் தான் அவர். (இந்தப் பாடலைப் பாடியவர் K.J.ஜேசுதாஸ் என்று பலர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்)

இவர் மட்டும் குறைந்தவர் அல்ல. SONY தொலைக்காட்சி நடத்திய BOOGEY, WOOGEY நடனப் போட்டிகளில் இறுதிப்போட்டியில் பங்கு கொண்டவர் இவர்.

தற்போது நான் எனது பந்து வீச்சில் முன்னேற்றம் கண்டுள்ளதாகவே நினைக்கிறேன். இந்தியன் ஏயார் லைன்ஸ் அணியுடன் வட இந்திய வித்தியாசமான மைதானங்களில் பந்து வீசியதே இதற்குக் காரணம் என்கிறார். மேலும் இந்த அனுபவங்களின் ஊடே பெங்களூர் பயிற்சி முகாமிலும் சிறப்பாகச் செய்தேன். அங்குதான் கிறேக் செப்பல் என்னை முதன் முதலில் கண்டார் என்றும் கூறுகிறார்.


சச்சின் டெண்டுல்கர் இந்தியச் சக்கரவர்த்தி

முதலாவது இலங்கை - இந்திய ஒருநாள் போட்டியில் முதல் சர்வதேச அறிமுகத்தைப் பெற்ற இவர், கிறேக் செப்பலின் முன்னிலையில் இலங்கை வீரர் டில்ஹார லொக்கு ஹெட்டிகேயின் விக்கெட்டைத் தகர்த்து தனது முதலாவது சர்வதேச விக்கெட்டைப் பெற்றுக் கொண்டார். அடுத்து சுழல் புயல் முரளீதரனின் இலக்கையும் பெற்று இரண்டு விக்கெட்டுகளை மொத்தமாகப் பெற்றுக் கொண்டார்.

கேரளப் பத்திரிகைகள் இவரைப் பற்றியே எழுதோ எழுதென்று எழுதித் தள்ளுகின்றன. இவரது உள்ளுணர்வு இன்னும் நிறைய கேரள கிரிக்கெட் வீரர்களுக்கு உந்துசக்தியாக இருக்கும் என்று நம்புகின்றது. அது உண்மை தான். சிறீசாந்தின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கப் போகிறது. இவர் மலபார் முதல்வன்.

**- ஜோசப் கிருஷ்ணா**

# இன்னொரு எல்லை

இங்கிலாந்தின் உதைபந்தாட்டப் பயிற்றுநர் ஸ்வைன் கொரான் எரிக்சன், மான்செஸ்டர் யுனைற்றட் கழகத்தின் உதைபந்தாட்டப் பயிற்றுநர் அலெக்ஸ் போர்குசன் இருவரும் ஒருவரைப் பற்றிப் பெரிதும் கவலைப்படுகிறார்கள். அவர் வேறுயாருமல்ல. இங்கிலாந்தின் இள்மைப்புயல் வெய்ன் றூனிதான். அத்த திறமை வாய்ந்த இவரின் மைதான மற்றும் வெளி நடத்தைகள் தொடர்பாகப் பொதுவாக நல்ல பெயர் இல்லை. பல தடவைகள் மஞ்சள் அட்டை தேவையில்லாமல் சிவப்பு அட்டை என்று வண்ணம் பூசிக்கொள்கிறார் றூனி. எதிரணி வீரர்களிடம் மரியாதை இல்லை. விளையாட்டு முறைமையில் நேர்மையின்மை, மத்தியஸ்தர்களை மதிக்கத்தெரியாமை என்று பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது.


டேவிட் பெக்கம் தப்பான முன்மாதிரி

2002 ஆம் ஆண்டில் தனது பதினாறு வயதில் எவர்டன் அணிக்காகப் புயலாக நுழைந்தவர் வெய்ன் றூனி. இதனைத் தொடர்ந்து வந்த ஒருவருடத்துக்குள் இரண்டு சாதனைகளை நிலை நாட்டியவர் இவர்.

அதாவது இங்கிலாந்து அணிக்குத் தெரிவு செய்யப்பட்ட மிக இளவயது வீரர். இரண்டாவது மிக இளவயதிலேயே கோல் போட்ட வீரர். இந்த இரண்டு சாதனைகளும் இவரது வயதுக்கு மிக மிக அதிகமானவை. 2004 ஐரோப்பிய சம்பியன்ஷிப் போட்டிகளில் இவர் நான்கு கோல்களைப் போட்டதன் மூலம் இரண்டு கனிகளை ஒரே கல்லில் கொய்து விட்டார். ஆனால் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் தவிக்கிறார் இவர்.

அடுத்த வருடம் உலகக்கிண்ண உதை பந்தாட்டத் திருவிழா ஜேர்மனியில். மிகக் குறுகிய காலத்தில் இங்கிலாந்தும் தன் பலத்தை அதிகரித்து கிண்ணத்துக்குப் போட்டிபோடும் முதன்மை நாடுகளில் ஒன்றென்ற நிலையைப் பெற்றுக்கொண்டுள்ளது. இங்கிலாந்தின் பயிற்றுநர் எரிக்சன் - றூனியின் கடமைப் பொறுப்புகளை ஞாபகப்படுத்துகிறார். எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்று றூனிக்கு எடுத்துக்கூறுகிறார். றூனியும் தன் பலவீனங்களை உணர்ந்து கொண்டது போலப் பேசுகிறார். எனது முற்கோபம் என்னைப் பல சந்தர்ப்பங்களில் பாதித்து விட்டது உண்மை தான். ஆனாலும் நான் இளம் பையன் என்ற வகையில் விட்ட பிழைகளில் இருந்து நிறையக் கற்க விரும்புகின்றேன். கற்றுக் கொள்வேன் என்கிறார்.


போர்குசன் - றூனி தப்புச் செய்தது தப்பு

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் - இங்கிலாந்தின் அணித்தலைவர் டேவிட் பெக்கம் ஒன்றும் ஆஹா ஓஹோ என்று நற்பெயரைக் கொண்டவராக இல்லை. இவரும் மஞ்சள், சிவப்புச் சாயங்களை அண்மைக்காலத்தில் அதிகமாகவே பூசிக்கொண்டு வருகின்றார். மைதான நடத்தைக் கோளங்கள் நல்லதாக இல்லை. "மன்னன் எவ்வழி மக்களும் அவ்வழி" என்று றூனி தலைவரைப் பின்பற்றுகின்றாரோ தெரியவில்லை.

இதெல்லாம் போக, ஒக்ரோபர் 31 ஆம் திகதி றூனியின் பிறந்த நாள் அதுவும் TEENAGE கடந்து 20 வயதுக்குள் நுழையும் நாள். இதனைப் பற்றி இரண்டு பயிற்றுனர்களும் - அப்பாடா, இனி வாழ்க்கையின் அடுத்த கட்டத்துக்குள் நுழையப்போகிறார் றூனி. இனியாவது பொறுப்புள்ள மனிதராக மாறுவார் என்று எதிர்பார்ப்போம் என்று முடிக்கிறார்கள்.

**- ஜெராட்**

# இவனுக்குப் போராட்டம் புதிதல்ல


கங்கூலியின் சாம்ராஜ்யம் சரிகிறதா? சரிக்கப்படுகிறதா? எந்த வீரரும் ஒருநாள் ஓய்வு பெற்றுத்தான் ஆகவேண்டும். ஆனால் கங்கூலி ஓய்வு பெறவைக்கப்படும் முறை அவரது தகுதிக்குச் சற்றுப் பொருத்தமானதல்ல. அவர் ஒரு ராஜ மரியாதையுடன் வழி அனுப்பப்படவேண்டியவர். என்றாலும் சிம்பாப்வே சதம், சலெஞ்ஜர் சதம் எல்லாவற்றையும் மேவி கங்கூலிக்கு அணிக்குள் நுழைய இரும்புத்திரையொன்று விதிக்கப்படுகின்றதென்றால், அது கிரிக்கெட்டுக்கு அப்பால் உள்ள வலைப்பின்னல் ஒன்று என்பதை ஒளித்து மறைத்து எழுத வேண்டிய அவசியமுமில்லை யென்றே தோன்றுகிறது. கங்கூலி அணியில் இடம்பெறாமை பற்றிக் கருத்துக்கூறும் விமர்சகர், இதுவே கங்கூலியின் முடிவின் ஆரம்பமாக இருக்கலாம். இருந்தாலும் மாற்றங்களை விரும்பும் இந்திய தெரிவாளர்கள் துணிந்து தான் நிற்கிறார்கள் என்று கூறியுள்ளார்.



ராகுல் டிராவிட் சர்ச்சை இவருக்கல்ல

கங்கூலி அணியில் இல்லை என்று ஜீரணிப்பது கடினமானது. அவர் இல்லாது போவதற்கு அப்படி ஒரு பாவமும் செய்து விடவில்லை என்கிறார்கள் சிலர்.

என்றாலும் கங்கூலிக்கான இந்தியக் கிரிக்கெட் அணியின் இடம் என்பது - வேறு பரிமாணங்களிலும் பார்க்கப்பட வேண்டியது. மகேந்திர சிங் டோனி, ஜே.பி.யாதவ், மொகட் கைவ் போன்றவர்கள் வரிசையில் இருக்கும் போது, கங்கூலியின் இடம் கேள்விக்குரியதாவதில் ஆச்சரியம் இல்லை தான். கங்கூலிக்கு இடம் கொடுப்பதாயின் இன்றைய நிலையில் ஜே.பி.யாதவின் இடத்தையே கொடுக்கவேண்டும்.


சௌரவ் கங்கூலி மீண்டெழுவானா இவன்?

2007 இல் உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்று இந்தியத் தெரிவாளர்களும், பயிற்றுநர் செப்பலும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் இவ் வேளையில் இளமையா? முதுமையா? என்ற வினா எழுந்தால் எது முதன்மை பெறும்?

முதல் மூன்று ஒருநாள் போட்டிகளிலும் லாவகமாக வென்றிருக்கும் இந்திய அணியில் கங்கூலி இல்லை என்பதே இந்திய தெரிவாளர்களுக்கும், கிறேக் செப்பலுக்கும் ஆறுதலும் மகிழ்ச்சியும் தரும் விடயமாக இருக்கும் போலத் தெரிகின்றது. என்றாலும் கங்கூலி தன் இடத்தை விட்டுக்கொடுக்கும் இயல்பு உள்ளவர் அல்ல. அதே போன்று போராடும் இயல்பும் கொண்டவர். எனவே தன்னை ஓரங்கட்ட முயலும் எந்தச் சக்தியையும் தன் திறமையைக் கொண்டே எதிர்ப்பார் இவர் என்று நம்பலாம்.

மறுபுறம் டிராவிட்டின் திறமையும், பணிவும் கூட கங்கூலிக்கு எதிராக அமையக்கூடும். அது கங்கூலியால் குற்றம் சாட்டப்படக்கூடிய விடயமும் அல்ல. டிராவிட்டால் தவிர்த்து கொள்ளக்கூடிய விடயமும் அல்ல. எனவே இந்திய - இலங்கை ஒருநாள் தொடர் முடிந்த பின்பே கங்கூலி எங்கே நிற்பார் என்பதை ஊகித்துக்கொள்ள முடியும் போலத் தெரிகின்றது.

**- மக்டலின்** விளையாட்டு அரங்கம்


EXPOAIR your friend in the skies...
எக்ஸ்போ எயார் வானத்தில் உங்கள் நண்பன்...



தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



# காந்தரூபன் அறிவுச்சோலையினுடைய ஒவ்வொரு கட்ட வளர்ச்சியும் உன்னதமானது

## காந்தரூபன் அறிவுச் சோலை இயக்குநர் புவியரசன் தெரிவிப்பு

கிளிநொச்சி—

காந்தரூபன் அறிவுச்சோலையினுடைய ஒவ்வொரு கட்டமும் ஒவ்வொரு ஆண்டுகளும், ஒவ்வொரு செயற்பாடுகளும் இன்றைய எமது போராட்ட வரலாற்றில் மிக உன்னதமான ஒரு காலகட்டத்தைத் தாண்டி நிற்கிறது என, காந்தரூபன் அறிவுச் சோலையின் இயக்குநர் புவியரசன் தெரிவித்தார்.

காந்தரூபன் அறிவுச்சோலையின் 12 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழீழ தேசியத் தலைவரின் சிந்தனைக்கேற்ப காந்தரூபன் அறிவுச்சோலைச் சிறார்களின் வளர்ச்சி அமைந்துள்ளது.

ஒவ்வொரு காலகட்டத்திலும் பிள்ளைகளினுடைய வளர்ச்சி, தலைவருடைய சிந்தனைக்கேற்ற வகையிலே இன்று 12 ஆண்டுகளைத் தாண்டி நிற்கிறது. இந்தக் காலத்தை நாங்கள் மையமாகக் கொண்டு இந்தப் பிள்ளைகளை 12 ஆண்டுகள் வளர்த்திருக்கின்றோம்.


இந்த 12 ஆண்டுகள் பிள்ளைகளுக்கு அறிவூட்டியிருக்கின்றோம். பிள்ளைகளுக்குத் தேவையான விடயங்களிலேயே ஒரு முழு நிறைவுத்தன்மையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கின்றோம். அதன் பயனாக இத்தனை ஆண்டுகளில் யாதாயினும் ஒரு துறையில் இந்தப் பிள்ளைகளுக்கு சித்தி கிடைத்திருக்கிறது.

அந்தவகையில் நாம் பெருமகிழ்ச்சியடைவதில் வியப்பில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை காந்தரூபன் அறிவுச்சோலை இயக்குநர் புவியரசன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை ஞானேஸ்வரன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அறிவுச் சோலை கொடி ஏற்றப்பட்டு, மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கான சுடர் ஏற்றப்பட்டு, மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

காந்தரூபன் அறிவுச்சோலையின் 12 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய நூலினை சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்ட புலிகளின்குரல் பொறுப்பாளர் தமிழன்பன் வெளியிட்டு வைத்ததுடன் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில்களையும், பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய மாணவர்களுக்கான பரிசில்களையும், விளையாட்டுகளில் சிறந்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### நவம்பர் - 06

1822 : நவீன இரசாயனவியல் கொள்கைகள் உருவாகக் காரணமாக இருந்தவர்களான பிரான்ஸைச் சேர்ந்த விஞ்ஞானி கிளாடி லூயிஸ் பெர்தோலட் பாரிஸ் நகரில் காலமானார்.

1860 : ஆபிரகாம் லிங்கன் அமரிக்காவின் 16ஆவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1869 : தென் ஆபிரிக்காவில் கேப் நகரில் வைரங்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

1903 : பனாமா குடியரசுக்கு அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தகவலறிந்து ஒரு மணி நேரத்துக்குள்ளேயே அதனை அங்கீகரிகரித்து உத்தரவு பிறப்பித்தார். அமெரிக்க வரலாற்றிலேயே ஒரு புதிய அரசுக்கு நாட்டிற்கு இவ்வளவு விரைவாக அங்கீகாரம் அளித்தது இந்த உத்தரவு மட்டுமேயாகும்.

1917 : நியூயோர்க் மாநிலம், மாநிலத் தேர்தல்களில் பெண்கள் வாக்களிக்க வகை செய்யும் அரசியல் சட்ட திருத்தத்தைக் கொண்டுவந்தது.

1918 : போலந்து குடியரசுநாடானதாக அறிவிக்கப்பட்டது.

1923: முதன் முதலாக மின்சாரத்தில் இயங்கும் முகச்சவரம் செய்யும் இயந்திரம் அமெரிக்காவில் அறிமுகம் செய்யப்பட்டது.

1926 : இத்தாலியில் எதிர்க்கட்சிகள் அனைத்தையும் முஸோலினி தடை செய்வதாக அறிவித்தார்.

1927 : இத்தாலிய இராணுவத்தில் பரசூட் படைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, அவற்றுக்கான பயிற்சிகள் வழங்கப்படத் தொடங்கின.

1943 : அந்தமான் - நிக்கோபார் தீவுகளை ஜப்பான் அரசு சுபாஸ் சந்திரபோஸின் தலைமையிலான ஆஜாத் ஹிந்த் அரசிடம் ஒப்படைத்தது. அவைகளின் பெயரையும் ஷாகித், ஸ்வராஜ்தீப் என மாற்றப்பட்டன.

1954 : பிரான்ஸின் ஆதிக்கத்திலிருந்த அல்ஜீரியாவில் விடுதலைப் போர் ஆரம்பமாகியது. டுனிஹியாவிலிருந்தும், மொரோக்கோவிலிருந்தும் அல்ஜீரியத் தேசியவாதிகள் வந்து அல்ஜீரியாவிலிருந்த பிரான்ஸியப் படை நிலைகளைத் தாக்க ஆரம்பித்தனர்.

1956 : ஸாம்பியாவுக்கும், ஸிம்பாப்வேயிற்கும் இடையே ஸாம்பவி ஆற்றின் குறுக்கே கரீபா அணை கட்டும் பணிகள் ஆரம்பமாகின.

1957 : செங்குத்தாக மேலெழுந்து பறந்து செல்லும் விமானத்தின் வெள்ளோட்டம் இங்கிலாந்தில் மெய்டன் ஹெட் என்ற இடத்தில் நடந்தது.

1962 : பிரிட்டிஷ் கடற்படையைச் சேர்ந்த கடலாய்வுக்கலமான எச்.எம்.எஸ்.குக், பசுபிக் மாகடலில் பிலிப்பைன்ஸுக்கு கிழக்கே மிக ஆழமான பகுதியான மின்டியானோ அகழியைக் கண்பிடித்தது. இதன் ஆழம் 11.5 கிலோமீற்றராகும்.

1966 : நிலவில் விண்கலம் இறங்குவதற்குத் தகுதியான இடங்களைத் தேர்வு செய்வதற்காக, அமெரிக்கா ஆர்பிட்டர் - 2 என்ற விண்கலத்தை அனுப்பியது.

1974 : ஆர்ஜென்ரீனாவில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

1976 : ஈரானில் இராணுவ ஆட்சி ஏற்பட்டது.

1988 : அமெரிக்கப் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த 6000 கணினிகள், கனிணி வைரஸினால் பாதிக்கப்பட்டு முற்றாகச் செயலிழந்தன.

1992 : ஜப்பான் இளவரசர் ஆகிஷினோவும், அவரது மனைவி கிகோவும் இலங்கைக்கு வருகை தந்தனர்.

1993 : புதன் கிரகம் சூரிய வட்டத்துக்குள் பிரவேசித்து மீண்டும் வெளியேறியது. இவ்வாறான நிகழ்வு மிக அரிதாகவே நடைபெறும் நிகழ்வாகும்.

**தொகுப்பு : — சந்துரு**

# திருவள்ளுவர் மாநாட்டை முன்னிட்டு மாபெரும் பண்பாட்டு பவனி விழா





கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் நடத்தும் திருவள்ளுவர் மாநாட்டை முன்னிட்டு, கிளிநொச்சி நகரில் மாபெரும் பண்பாட்டுப் பவனி இடம்பெற்றது. நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணியளவில் கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலிலிருந்து ஆரம்பித்த இந்தப் பண்பாட்டுப் பவனி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தைச் சென்றடைந்தது.

தமிழரின் பாரம்பரிய இசைக் கருவிகள் முழங்க, வன்னி மண்ணில் சேரன், சோழன், பாண்டியன் ஆகிய தமிழரசர்களின் பெயர்களில் இயங்கும் நிறுவனங்கள் அந்த அரசர்களையும், ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையினர் பண்டாரவன்னிய அரசனையும், கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் பேரரசன் இராவணனையும் சித்தரித்த பண்பாட்டு அணிவகுப்பு இடம் பெற்றது. இதன்போது திருவள்ளுவரின் திருவுருவப்படமும் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் பவனியாகபண்பாட்டுமண்டபத்தை நோக்கி எடுத்துவரப்பட்டது.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தை வந்தடைந்ததும், அங்கு கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் தமிழீழ தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். இந்த நிகழ்வில் மங்களவிளக்கை வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் மற்றும் பவனியில் ஐந்து அரசர்களைச் சித்தரித்து வந்தோர் ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து திருவள்ளுவரின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரை கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து தலைமையுரை, வரவேற்புரை, வாழ்த்துரை, விருந்தினர் உரை என்பன இடம்பெற்றன. இந்த நிகழ்வில் சிறப்புரையை யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பங்குபற்றிய பாடசாலை மாணவர்கள் மற்றும் நிறுவனசார் ஊழியர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

# மன்னாரில் கைதுசெய்யப்பட்ட பொலிஸார் விடுதலை கோரிய பிணை மனு நிராகரிப்பு!

மன்னார்

மன்னாரில் கைதுசெய்யப்பட்ட மூன்று காவற்துறையினரையும் விடுதலைசெய்யவேண்டும் எனக்கோரி தமிழீழ விடுதலைப்புலிகளின் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிணைமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள நீதிமன்றத்தில் இந்த மூன்று காவற்துறையினரையும் ஆஜர் செய்தபோது அவர்கள் சார்பில் வாதாடிய சட்டத்தரணி வேலகர் மூன்று காவற்துறையினரையும் விடுதலைசெய்யவேண்டும் எனக் கோரினார்.

இவர்களின் தடுத்துவைப்பு காரணமாக உறவினர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளானதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். எனினும் ஏற்கனவே எதிர்வரும் 14 ஆம் திகதிவரை இந்த மூவரையும் விளக்கமறியலில் வைக்கும் உத்தரவை தமிழீழ விடுதலைப்புலிகளின் நீதிமன்றம் விலக்கிக்கொள்ளவில்லை.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் வெளிநாட்டவர் ஒருவரைக் கைதுசெய்வதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றபோதே இவர்கள் மூவரும் கடந்த செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டனர்.

# வவுனியா மக்களுக்கான தற்காப்பு பயிற்சி!





வவுனியா—

வவுனியா இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் தற்காப்புப் பயிற்சியின் இரண்டாவது அணியினருக்கான பயிற்சி நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் அரச திணைக்கள ஊழியர்கள் பங்கெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நவநீதன் பயிற்சிப் பாசறையில் முதல் அணியினர்களுக்கான பயிற்சிகள் கடந்த 1 ஆம் திகதி ஆரம்பமாகியது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம் தேசியக்கொடியை ஏற்றி, பயிற்சிகளைத் தொடக்கி வைத்தார்.

தொடர்ந்தும் வவுனியா மாவட்ட மக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் நடைபெறும் என வவுனியா மாவட்ட அரசியற்துறையினர் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

முழு முட்டாள்கள் மற்றும் முழுமையான அறிவாளிகளால் பிரச்சினை இல்லை. இருவகையிலும் அரைகுறைகளால்தான் ஆபத்து.

- யாரோ -

## நமது நோக்கு

# ஒரு பேரினவாதியின் திடீர் ஞானம்!

கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்யும் பேர்வழிகளுள் தானும் ஒருவர் என்பதை ஐக்கிய தேசியக்கட்சியின் தற்போதைய பிரமுகர்களில் ஒருவரும், முன்னாள ஜாதிக ஹெல உறுமயத் தலைவரும், அக்கட்சியை ஸ்தாபித்தவர்களுள் முக்கியமானவருமான திலக் கருணாரத்ன நிரூபித்துள்ளார் என்றே கூறவேண்டும்.

திலக் கருணாரத்ன என்ற பெயரைக் கேட்கும்போது 1990 களின் பிற்பகுதி அரசியல் சூழல் நினைவுக்கு வரவே செய்யும். ஜாதிக ஹெல உறுமயவினரின் அரசியல் பிரசாரம் தீவிரமடைந்து, தமிழர்களுக்கெதிரான யுத்தத்தை தீவிரப்படுத்தும் வகையில் அவர்களுடைய செயற்பாடுகள் அமைந்திருந்த அந்தச் சூழலில் - எஸ்.எல்.குணசேகர, திலக் கருணாரத்ன, சம்பக்க ரணவக்க போன்றோரின் போர் வெறியைத் தூணடும் இனவெறிக்கருத்துக்கள் தென்பகுதியில் பரவலாக ஒலித்துக் கொண்டிருந்த நேரம் அதுவாகும்.

சிங்கள மொழி, சிங்கள தேசம், பௌத்த மதம் என்ற அரசியல் கோட்பாட்டை தென்னிலங்கை அரசியலில் உத்வேகத்துடன் பரப்ப முயன்ற இவர்களின் பேச்சுக்களும், எழுத்துகளும் கக்கிய பேரினவாத விஷம், இன்று எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதற்கு இன்று நாடாளுமன்றில் அமர்ந்திருக்கும் அத்துரலிய ரத்னதேரர் போன்றவர்களின் செயற்பாடுகளே சிறந்த சான்றாகும்.

கடந்த சபாநாயகர் தேர்வில் இந்தக் ஹெல உறுமயக் காரர்களும், ஜே.வி.பியினரும் அடித்த கூத்துக்கள் ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கியதை எவரும் மறந்திருக்க மாட்டார்கள்.

ஆரம்பத்தில் ஹெல உறுமயக் குழுவினர் தமது கட்சியின் சின்னமாக வில்லையும் அம்பையும் தேர்ந்தெடுத்த போதே இவர்கள் இந்த நாட்டில் தமிழின வேட்டை ஒன்றை நடத்தும் உள்மன வியூகத்துடன் தான் களமிறங்கியுள்ளார்கள் எனற உண்மையை தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

ஹெல உறுமயவின் ஸ்தாபகர்கள் மற்றும் முக்கிய உறுப்பினர்களுள் இனவாத பிக்குகள், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள், ஓய்வுபெற்ற பிரதிப்பொலிஸ் மா அதிபர், மற்றும் இனவெறிச் சிந்தனையாளர்கள் - கொள்கையாளர்கள் நிறைந்திருந்தமையானது அக்கட்சியின் அரசியல் இலக்கை மிகவும் தெளிவாக உணர்த்தி நின்றது.

ஹெல உறுமயவினர் மிகவும் தீவிரமான பௌத்த சிங்கள அடிப்படைவாதிகள் என்பதை நிரூபிக்கச் சிறந்த சான்று, அக்கட்சியின் முதல் தலைவராக பெறுப்பேற்ற பிரசித்திபெற்ற தமிழின விரோதயும் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளுக்கான போராட்டத்தையும், தமிழீழ விடுதலைப்புலிகளையும் நிராகரித்தும், விமர்சித்தும், கொச்சைப்படுத்தியும் பல நூல்களை எழுதி வெளியிட்டவருமான எஸ்.எல்.குணசேகரவை, அவர் ஒரு பௌத்த சிங்களவரல்ல கிறிஸ்தவ சிங்களவர் என்பதற்காகவே கட்சித்தலைமையில் இருந்து நீக்கியமையாகும்.

அவர் பின்னர் ஹெல உறுமயவை விட்டே ஒதுங்கிக் கொண்டார்.

- அப்போது அவரை நிராகரித்து ஒதுக்கக் காரணமானவர்களில் முக்கியமான இருவரில் இந்த திலக் கருணாரத்னவும் ஒருவர். இவரே பின்னர் கட்சியின் தலைவராக ஓரிரு வருடங்கள் இருந்ததுடன், தாங்களே... அதாவது, ஹெல உறுமயவினரே பௌத்த சிங்கள மக்களினதும், பௌத்த சாசனத்தினதும் காவலர்கள் என தம்பட்டமும் அடித்து வந்தார்.

தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் யுத்தத்தை தீவிரப்படுத்துமாறும், விடுதலைப்புலிகளை அழிக்க 50 ஆயிரம் சிங்கள இளைஞர்களை அணிதிரட்டப் போவதாகவும் பரபரப்பாக அறிக்கை விட்டவரும் இவரேதான்...

ஆனால், ஹெல உறுமயவில் நிதி தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டபோது, கட்சிக்கான அலுவலகமாக தனது வீட்டையே கொடுத்திருந்த திலக் கருணாரத்னவுக்கு - குணசேகரவுக்கு நேர்ந்த கதியே ஏற்பட்டது.

அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் அடைககலம் புகுந்த திலக் கருணாரத்ன தனக்கு வயது முதிர்ச்சி காரணமாக பக்குவம் ஏற்பட்டு ஞானம் வந்துள்ளதாகக் கூறி - ஒற்றையாட்சி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்று தான் உணர்ந்துள்ளதாக இப்போது புதிய அறிவிப்பு செய்துள்ளார்.

'வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என்று 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இல்ஙகை உடன்பாட்டின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டவிடயம். எனவே ஒஸ்லோ உடன்படிக்கையில் அது சேர்க்கப்படவில்லை' என்று கூறும் இவர் ஜனாதிபதித் தேர்தலின் பினனர் எத்தகைய குத்துக்கரணம் அடிப்பாரோ தெரியாது.

'ஒரு மொழி இருநாடு, இருமொழி ஒருநாடு' என்று சமதர்மக் கொள்கை பேசிய சிங்களத் தலைமைகள் பதவிக் கதிரையில் அமர்ந்ததும் எத்தகைய கொள்கைப் பிறழ்வுகளுக்காளானார்கள் என்பது அனைவரும் அறிந்த விடயமே.

கருணாரத்னவின் இன்றைய கருத்து நிலைப்பாடு ஒற்றையாட்சியை நிராகரிப்பதாகக் கூறுகிறதே தவிர, சமஷ்டி ஆட்சியை, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகக் கூறவில்லையே...

அரசியல் அங்கீகாரமற்ற அதிகாரப்பரவலாக்கல் என்ற அர்த்தமற்ற, பேய்க்காட்டும் சொற்தொடரைத் தானே அவரும் சந்திரிகா அம்மையாரைப் போன்று பயன்படுத்திப் பம்மாததுவிடுகிறார்.

ஒருவேளை சமஷ்டி - சுயநிர்ணயஉரிமை ஆகியவறறை ஏற்றுக்கொள்ள அவருக்கு இன்னமும் - வயது மற்றும் அனுபவ அறிவு, முதிர்ச்சி ஏற்படாமலும் இருக்கலாம்...

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# தேர்தல் புறக்கணிப்பிலும் சிலரின் தில்லு முல்லுகள் வெற்றிபெற வாய்ப்பு?

சிறிலங்காவின் ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதியாக எவர் வந்தாலும் எமக்குப் பயனில்லை, இதனால் இது பற்றி எமக்குக் கவலையுமில்லைத்தான். ஆனால், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நமது மக்களை முட்டாள்களாக்கிவிடக்கூடாது. உதாரணமாக யாழ்ப்பாணத்துக்கென்று, பலாலிக்கு வந்த பிரதம மந்திரியும், சிறிலங்கா மக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ காங்கேசன்துறையில் மக்கள் சிலர் சமுகமளித்த ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டார். உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள நடேஸ்வராக் கல்லூரியில் இந்தக் கூட்டம் நடை பெற்றிருக்கிறது. இதில் மஹிந்த பேசிய பேச்சுக்கூட ஊடகங்களில் வெளிவந்திருக்கிறது. மஹிந்த கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தின் புகைப்படமும் ஊடகங்களில் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தக் கூட்டம் எப்படிக் கூட்டப்பட்டது? இதில் கலந்து கொண்ட மக்களில் பலரும் எப்படி ஏமாற்றப்பட்டார்கள் என்பதெல்லாம் வேறுகதை. மக்கள் சிலர் ஏமாற்றப்பட்டு இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இதே போல் தேர்தலைப் புறக்கணிக்கவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்றுத் தேர்தல் வாக்களிப்பை மக்கள் புறக்கணிக்கும் சமயத்திலும் இப்படி ஏமாற்று வேலைகள் நடைபெறமாட்டாதென்று எப்படிச் சொல்லமுடியும், எப்படி நம்பமுடியும்? பகிஷ்கரிக்கும் முடிவை மஹிந்தவின் தேர்தல் வெற்றிக்கு உழைப்பவர்கள் தமக்குச் சாதகமாக்கி இப்படி ஏதாவது செய்துவிட்டால், அவர்கள் புத்திசாலிகளாகிவிடுவார்கள்; மஹிந்தவும் தமிழ் மக்களின் வாக்குகளால் வெற்றிபெற்றுவிடமாட்டாரா? என்று என் முன் அமர்ந்த நண்பர் பரமசிவம் கேட்டார்.

உமது சந்தேகத்தில் நியாயமிருக்கத்தான் செய்கிறது. ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பைப் புறக்கணிக் கும்படி, அதாவது பகிஷ்கரிக்கும்படி விடுதலைப் புலிகள் இதுவரை சொல்லவில்லை. 'வாக்களிக்கும்படி நாங்கள் எமது மக்களுக்குச் சொல்லவில்லை, வாக்களிக்க வேண்டாம் என்றும் நாம் மக்களுக்குச் சொல்லவில்லை. அவர்கள் விருப்பம்போலச் செய்யலாம் என்றே சொல்லியிருக்கிறோம்' என்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். கடந்த தேர்தலின்போது மக்கள் நீண்டதூரம் நடந்து செல்வதைத் தவிர்ப்பதற்காக அவர்கள் செல்வதற்குப் பயண வசதியை விடுதலைப்புலிகள் செய்து கொடுத்திருந்தனர். இம்முறை வாக்களிக்க விரும்பும் மக்கள் தங்கள் போக்குவரத்துக்கு அவர்களே ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்று நான் சொன்னேன்.

இரண்டு பிரதான வேட்பாளர்களும் தமிழ்மக்களின் உரிமைகள் பற்றி எந்தத் தெளிவான விளக்கத்தையோ, தங்கள் கொள்கையையோ எடுத்துச் சொல்லவில்லை. வழமைபோலத் தமிழ் மக்களை ஏமாற்றும் வாக்குறுதிகளைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே இவர்கள் எவருக்குமே வாக்களிக்காமல் புறக்கணிக்க வேண்டுமென்று தமிழ் மக்களில் ஒரு பிரிவினர் அறிவுறுத்துகிறார்கள். இதே சமயம் இந்தத் தேர்தலை நிராகரித்து வாக்குகளைச் செல்லுபடியற்றதாக்க வேண்டுமென்று புதிய இடதுசாரி ஜனநாயகக் கட்சி கோரிக்கை விட்டிருக்கிறது. தேர்தல் என்றாலே ஜனநாயகம் பேசும் எல்லோருமே ஏமாற்றும் தந்திரங்களைக் கையாள்வார்கள் என்பது கடந்தகால அனுபவம். பணத்தைக்காட்டி வாக்குகளைப் பெறுவது, பதவியைக் காட்டி வாக்குகளைப் பெறுவது, வேலைவாய்ப்பு உத்தியோகம் என்பவற்றைச் சொல்லி வாக்கு வேட்டையாடுவது சாதாரண சம்பவம், ஒவ்வொரு தேர்தலிலும் இவை நடைபெறும் மக்க ளும் ஒவ்வொரு தேர்தலிலும் இவற்றுக்காக வாயைப்பிளந்து ஏமாந்து போவார்கள். சிலர் மட்டும் புத்திசாலித்தனமாகப் பணம் வாங்கிக் கொண்டு வேறு வேட்பாளருக்கு வாக்களிப்பார்கள் என்று பரமசிவம் சொன்னார்.


1947ஆம் ஆண்டில் சுதந்திர இலங்கையின் முதல் நாடாளுமன்றத்துக்கு நடந்த பொதுத் தேர்தலில் காலித் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியில் தோமஸ் அமரசூரியா என்ற பெரும் பணக்காரரர் போட்டியிட்டார். அவரை எதிர்த்து டபிள்யூ தகநாயக்கா என்ற இடதுசாரியான பள்ளிக்கூட ஆசிரியர் போட்டியிட்டார். அமரசூரியா நிறையப் பணம் செலவிட்டார். மக்கள் அவரிடம் பணம் பெற்றனர். வாக்குகளை தகநாயக்காவுக்கு அளித்தனர். இப்படியும் மக்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வதுமுண்டு என்று நான் சொன்னேன்.

யாழ்ப்பாணத்திலும் இப்படிக் கடந்த தேர்தலில் நடந்ததாகச் சிலர் சொன்னதாக நினைவு என்று நான் சொன்னேன்.

இப்பொழுது விடுதலைப்புலிகளின் நிர்வாகத்திலுள்ள வன்னிப் பகுதியில் வாக்காளர்களுக்கு தேர்தல் தினத்தன்று வாக்களிக்கச் செல்வதற்கு போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்து கொடுக்கும்படி கிளிநொச்சி அரசாங்க அதிபரிடம் முப்பது லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், தேர்தல் ஆணையகம் இந்தப் பணத்தை வழங்கியிருப்பதாகவும், பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது. இந்தப் போக்குவரத்து ஏற்பாடுகளுக்காக 70,000 லீற்றர் டீசலும், 20,000 லீற்றர் பெற்றோலும் வழங்குவதற்கு இராணுவம் அனுமதி வழங்கியிருப்பதாகவும் இதே செய்தி தெரிவிக்கிறது. இந்தப் பகுதி யில் வாக்களிக்கச் செல்வோர் பயணம் செய்வதற்காககனரக வாகனங்கள் ஏற்பாடு செய்யப்படுவதாக இதே செய்தி மேலும் தெரிவிக்கிறது என்று பரமசிவம் சொன் னார்.

எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவை விடுதலைப் புலிகளின் சீருடையில் காட்டும் சுவரொட்டிகளை ஒட்டியதாக ஜே.வி.பிக்காரரர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கிருலப்பனை, பொல்ஹென்கொடவைச் சேர்ந்த அத்துக்கொறலகே தர்மதாச என்பவர் கைது செய்யப்பட்டு பிலியந்தலை மேலதிக நீதவான் முன் நிறுத்தப்பட் டார். இவர் கைது செய்யப்பட்ட போது 67 சுவரொட்டிகளை இவர் வைத்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. தனது வீட்டுச்சுவரில் சுவரொட்டிகளை சிலர் ஒட்டிக் கொண்டிருந்ததாகவும், தான் வெளியே வந்துபார்த்த போது அவர்கள் சுவரொட்டிகளைப் போட்டுவிட்டு ஓடி விட்டதாகவும், தான் அதை எடுத்துப் பார்த்த போது பொலிஸார் வந்து தன்னைக் கைது செய்ததாகவும் அவர் தெரிவித்தார். அந்த ஜே.வி.பி சந்தேகநபர் பிணையில் விடப்பட்டார் என்று பத்திரிகையில் வந்த செய்தியைச் சொன்னேன்.

தேர்தல் திருவிழா என்றால் பொய்யும் புரட்டும், திருகுதாளமும் கொடிகட்டிப் பறக்கும். இதுதான் சங்கரியார் சொல்லும் ஜனநாயகம் என்று சொன்னபடி நடந்தார் பரமசிவம்.




# தமிழ் மக்களின் தேர்தல் புறக்கணிப்பை அங்கீகரித்த சிங்களத் தலைவர்கள்

வந்தார்கள், பறந்து வந்தார்கள், தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கு வந்தார்களா? இல்லையே. அப்பொழுது ஏன் அவசர, அவசரமாகப் பறந்து வந்தார்கள்? தமிழ் மக்களைத் தமது நாட்டின் ஒரு பகுதியாக நினைத்திருந்தால் அல்லவா அவர்களிடம் வாக்குக் கேட்க நினைத்திருப்பார்கள். அவர்கள் வந்தது தமிழ் மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் சிங்களத்துப் படைகளிடம் வாக்குக் கேட்கவேயாகும். வந்தவர்கள் படையினரைச் சந்தித்தார்கள், உற்சாகப்படுத்தினார்கள், நவீன படைத்துறை வசதிகள் செய்து தரப்படும் என்று கூறினார்கள். நாட்டைப் பிரிப்பதற்கோ, பிளவுபடுத்தவோ விடமாட்டோம் என்று கூறினார்கள். அரசியல் பேசினார்கள், பறந்து சென்றார்கள். இத்தனையும் அவர்கள் வந்து சென்ற பின்னர் செய்தித்தாள்களைப் பார்த்த பின்னரே தமிழ் மக்களுக்குத் தெரியவந்தது.

இதிலே யாழ்ப்பாணத்திலே நடேஸ்வரக் கல்லூரியிலே தேர்தல் கூட்டம் நடந்ததாம். சிங்கள மக்கள் நினைப்பார்கள்- யாழ்ப்பாணத்திலே எங்கள் பிரதமர் கூட்டத்தில் பேசிவிட்டு வருகிறார் என்று. சிங்கள மக்களுக்குத் தெரியாது நடேஸ்வரக் கல்லூரி எங்குள்ளது என்று. அந்தக் கல்லூரி இராணுவத்தினரின் முழுக்கட்டுப் பாட்டிலுள்ள, பாதுகாப்பு வலய எல்லைக்குட்பட்ட மக்கள் நடமாட்டம் தடுக்கப்பட்ட இயங்காத பள்ளி என்பதை அறிந்தால் சிங்கள மக்களே சிரிப்பார்கள். இதைவிட மேலும் ஒன்றினை இங்கே கூறுவதும், கவனிப்பதும் மிக முக்கியமாகும். இலங்கைத் தீவின் எல்லாப் பகுதிக்கும் சென்று வரக்கூடிய கௌரவமான சமாதானத்தைக் கொண்டு வரப்போவதாகக் கூறிவரும் மஹிந்த - இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்துக்குச் சென்று, மக்களைச் சந்திக்காது இராணுவத்தினரையும், கடற்படையினரையும் மட்டும் சந்தித்து, கருத்துக்களைக் கூறிச் சென்றுள்ளார். அவர்களுக்கு என்ன கூறினார்? விடுதலைப் புலிகள் தனித் தமிழீழத்திலிருந்து இம்மியும் இறங்கி வரவில்லை. ஒற்றையாட்சியின் கீழ் தான் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன். எனக்கு உங்கள் வாக்குகளைத் தாருங்கள் என்பதே அவரது கூற்றாகும்.





இரண்டு முக்கிய வேட்பாளர்களும் யாழ்ப்பாணம் வந்தார்கள் தேர்தல் பரப்புரைக்கு என்று. சிங்கள மக்களை ஏமாற்றவும், படைத்தரப்பினரின் ஆதரவைப் பெறவுமே அவசர அவசரமாக வந்து திரும்பினார்கள். இதிலிருந்து பல விடயங்கள் தெளிவாகின்றன. நாம் தமிழ் வாக்காளர்களைச் சந்திக்க வரவில்லை. சிங்களப் படையணிகளிடமே வாக்குக் கேட்க வந்துள்ளோம். உங்களது ஆதரவு மட்டும் எமக்குப் போதும். தமிழ் மக்களை அடக்கி ஆளவும் உங்கள் ஆதரவு வேண்டும் என்பதே அந்த இருவரினதும் நிலைப்பாடாகும். தமிழ் மக்களின் உறுதிப் பாட்டை அவர்கள் உணர்ந்து கொண்டுள்ளார்கள். எவர் எப்படிப் போய் பரப்புரை செய்தாலும், தமிழர்களை ஏமாற்ற முடியாது. தேர்தலைப் புறக்கணிப்பது என்று முடிவெடுத்த மக்களிடம் எதைப் போய்ச் சொல்வது? அந்த மக்கள் மேலும் மேலும் ஏமாறத் தயாராக வில்லை. புலிகள் வேறு மக்கள் வேறல்ல என்பதை ரணிலும், மஹிந்தவும் புரிந்து கொண்டுள்ளனர். ஆனபடியால், தங்கள் பயணத்தை இராணுவத் தரப்பினருடன் நிறுத்திக் கொண்டுள்ளனர் என்பது தமிழ் மக்களின் கணிப்பாகும்.


இதை வேறு கோணத்தில் பார்த்தால் - தமிழ் மக்கள் வேறு நாட்டு மக்கள், இவர்களிடம் வாக்குக் கேட்கப்படாது, இவர்களை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்திற்குச் சலுகைகளை வழங்கி, வாக்குகளைப் பெற்றுத் தமிழ் மக்களை ஆக்கிரமித்துத் தொடர்ந்து ஆட்சி செய்யலாம் என்று அவர்கள் நினைத்துள்ளார்கள் என்றும் கருத முடியும். இதுவே உண்மையுமாகும். இராணுவத்தை அரசியல் மயப்படுத்தி, அவர்களது தயவில் ஆட்சியை நடத்தவுள்ள எந்தச் சிங்களத் தலைமையும் இதனைத் தான் செய்யும்.

இலங்கைத் தீவிலுள்ள பிரச்சினையைத் தமிழ் பேசும் மக்களின் தேசியப் பிரச்சினையாக, இந்த இருவரும் கருதவில்லை. இவர்கள் கூறுவதெல்லாம் வட-கிழக்குப் பிரச்சினை என்ற சொல்லாகவே உள்ளது. தீவின் வடக்கு-கிழக்குப் பகுதியில் தமிழ் தாயகம் உண்டு. அங்குள்ள மக்களின் பிரச்சினை என்று கூறினால், அது தமிழர் தாயகப் பிரச்சினையாகிவிடும் என்பதாலேயே தமிழர் பிரச்சினை என்று கூறாமல் தவிர்த்து, வட-கிழக்குப் பிரச்சினை என்று காட்ட முனைகின்றனர்.

தமிழர் பிரச்சினை என்று கூறத் தயங்கும் சிங்களத் தலைவர்கள், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண மாட்டார்கள் என்பது துலாம்பரம். எனவே தமிழ் மக்கள் தாங்கள் எடுத்த முடிவிலும் உறுதியாகவுள்ளார்கள். அந்தக் காலத்து அரசியல் மேடைகளில் “தன்கையே தனக்குதவி, தமிழரசே நமக்குதவி'' என்று கூறுவார்கள். அதுவே இன்றைக்கும் பொருந்துவதாக உள்ளது. தமிழினத்தின் வாழ்வுக்குத் “தமிழ் அரசே'' பாதுகாப்பானதாகும். எனவே தமிழினம் தனது தமிழ் அரசான தமிழீழத்தைக் காண்பதற்குத் தம்முள் உள்ள ஒரே வழி ஒற்றுமை மட்டுமே. தமிழினம் ஒற்றுமையாக நின்று சிங்கள நாட்டு அரசுத் தலைவர் தேர்தலைப் புறக்கணிக்குமானால், சர்வதேசம் எங்களைப் பார்த்து வியந்து நிற்கும். நாம் என்ன தடைகளைப் போட்டாலும், தமிழினம் தன் விடுதலைக்காக ஓரணியில் திரண்டுள்ளது. விடுதலைப்புலிகளையேதமிழினம் தனது விடுதலைக்குரலாக உயர்த்திக் காட்டுகிறது. எனவே, தமிழினத்தின் குரலை ஏற்க வேண்டும். அவர்களது நீதியானதும், நியாயமானதுமான உரிமைக் குரலை அங்கீகரிக்க வேண்டும் என்று சர்வதேசம் உணரும். அதற்காகத் தேர்தலைப் புறக்கணிப்பதில் உறுதியாக இருக்க வேண்டியது அவசியம் என்பதே தமிழ்மக்களின் நிலைப்பாடாகும். ★

-பரணி-

# “குடையொன்று விரிக்கப்படுகிறது கொம்பியூட்டர் முன்னால்...”



குருநகர், மவுண்கார்மேல் வீதியைச்சேர்ந்த அல்பெட் பெஸ்ரியன் 1988 ஆம் ஆண்டு நான்கு வயதுச் சிறுவனாக இருந்தார். அந்தக் காலத்தில் எமது மண்ணில் போர்க்காலச் சூழல் நிலவியது. மின்சக்தி பாவனை இருக்கவில்லை. ஆதனால் பழுதடைந்த 'போலியோ' சொட்டு மருந்தை வீடுவீடாகச் சென்று குழந்தைகளுக்கு வழங்கியதால், பெஸ்ரியன் போன்று அவயவங்கள் ஊனமுற்ற சிறுவர்கள் பலர். இன்னும் சில சிறுவர்கள் மரணித்தனர்.

உயிர் பிழைத்துக்கொண்ட பெஸ்ரியன் - 1990 ஆம் ஆண்டு ஆறாவது வயதில் இடம்பெயர்ந்து தமிழ்நாடு செல்ல நேர்ந்தது. அதற்கு முன்னர் முன்பள்ளியில் சிலமாதகாலமே இங்கே கல்வியைப் பெற்றுக்கொண்டார்.

இடுப்புக்குக் கீழே செயலிழந்துவிட்ட பெஸ்ரியனை, சிறு வயதில் தாயாரே இடுப்பில் சுமந்துசென்று கல்வியைக் கற்கவிட்டு அழைத்துவருவார். இதே நிலைமை தமிழ் நாட்டிலும் தொடர்ந்தது. ஆயினும் மனம் தளர்ந்துபோகாமல் சாதாரண கல்வியில் இருந்து, உயர் கல்வியையும் பெற்று இன்று கணினித் துறையில் அவர் ஒரு நிபுணராகத் திகழ்கிறார் என்றால், அவரது முயற்சியுடன் பெற்றோரின் அயராத உழைப்புந்தான் கைகொடுத்தது எனலாம்.

அவரை 'நமது ஈழநாடு' வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் அதேவேளை - இவரைப் போன்று யுத்தநிலைமையால் நமது மண்ணில் பலர் இழப்புகளுக்கு உள்ளாகியிருப்பார்கள். அவர்களில் பெஸ்ரியனைப் போன்று வாழ்க்கையில் எதிர் நீச்சலடித்து முன்னேறியவர் எத்தனைபேர்?

இனிமேலும் இவரைப் போன்ற திடமனதுடைய சிறுவர்கள் உருவாகவேண்டுமென்ற நோக்கத்துடன், அவருடனான சந்திப்பில் பெற்றுக்கொண்டவற்றை வாசித்துப் பாருங்கள்.

1990 ஆம் ஆண்டு நமது மண்ணில் ஏற்பட்ட யுத்த நிலைமையால் எனது குடும்பம் இந்தியாவின் தமிழ்நாட்டுக்கு இடம்பெயர்ந்தது. தமிழ்நாட்டில் தங்கச்சிமடம் என்ற இடத்தில் சிலநாட்கள் இருந்தோம். பிற்பாடு வெள்ளப்பள்ளம் அகதி முகாமில் சிறிதுகாலம். அடுத்து பவானிசாகர் இதன்பின்பும் இடம்பெயர்ந்து...

ஈரோடு மாவட்டத்திலுள்ள அறச்சலூர் என்ற மிகவும் பின்தங்கிய கிராமம். இத்தனை காலமும் முன்பள்ளிப் பாடங்களையும், வீட்டில் அம்மா கற்றுத்தந்தவையுமே எனது கல்வித் தராதரமாக இருந்தது.

முதல்முறையாக பாடசாலைக் கல்விக்காக அறச்சலூரில் இருந்த பாடசாலையில் மூன்றாம் வகுப்பில் சேர்க்கப்பட்டு, கல்வியைத் தொடர்ந்தேன். ஆறாம் வகுப்பில் இருந்து அறச்சலூர் உயர்நிலைப் பள்ளியில் இணைந்து 'பிளஸ்ற்ரூ' வரை கற்றுத் தேர்ந்தேன்.

இதற்கிடையில் ஒன்பதாம் வகுப்புப் படிக்கையில் - 'சென்ரல் வீடெக்' என்னும் தனியார் கணினிப் பயிற்சி மையத்தில் பெற்றோர் சேர்த்தார்கள்.

அங்கே கணினித்துறையில் 6 மாதகாலம் கணினி மென்பொருள் அடிப்படைக் கல்வியையும், 6 மாதகாலம் கணினி வன்பொருள் அடிப்படைக் கல்வியையும் கற்றுத் தேறியிருந்தேன்.

10 ஆம் வகுப்புப் படிக்கையில் வேறெந்தத் துறையிலும் ஈடுபடாமல், கல்லூரிப் பாடங்களையே கற்றதாலே 'பிளஸ்ற்ரூ' வகுப்பில் திறமைச்சித்தி பெறலாம் என்பதால், கணினிக் கற்கைகளை ஒருவருடம் நிறுத்தியிருந்தேன்.



10 ஆம் வகுப்பில் 60 விழுக்காடுகளுக்குமேல் எடுத்தாலே 'பிளஸ்ற்ரூ'வில் கணிதம் மற்றும் அறிவியல் பிரிவுகளுக்கு அனுமதி தருவார்கள். நான் அந்தத் தேர்வில் 68 புள்ளிகள் எடுத்து முதல் தரத்தில் தெரிவாகியிருந்தேன்.

அதேபோன்று 'பிளஸ்ற்ரூ'விலும் ஆங்கிலம், கணிதம், அறிவியல், தமிழ் பாடங்களில் முதல் தரத்தில் தெரிவாகினேன்.

அதேவேளை தனியார் நிலையத்தில் கற்றுவந்த கணினித் தேர்விலும் மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்ததால், பெருந்துறை நந்தாபொறியியல் கல்லூரி கணினிப் பிரிவில் சேர்க்கப்பட்டேன்.

4 வருடம் படிக்கவேண்டிய கற்கைகளில் என்னால் ஒரு வருடம் மட்டுமே கற்க இயன்றது. மூன்று மாடிகள் உள்ள அந்தக் கல்லூரியில் - முதல் மாடியில் எனக்கான கற்கைகள் இருந்தபோதும், இருபது படிகளில் தினம் ஏறி இறங்குகையில் முழங்கால் சிரட்டைகளில் தேய்வு ஏற்பட்டதால், வைத்தியரின் ஆலோசனைப்படி ஒரு வருடத்துடன் நிறுத்தவேண்டி ஏற்பட்டது. அவ்வேளை 'லிப்ற்' வசதிகள் இருக்கவில்லை.

திரும்பவும் அறச்சலூர் வந்தேன். அப்பொழுது முதலில் எனக்கு கணினி வகுப்பெடுத்த ஆசிரியர் இத்தோடு விட்டுவிடாமல் தொடர்ந்தும் கணினித்துறையில் மேலதிக கற்கை நெறிகளைப் பெறச் சொன்னார்.

பிற்பாடு மூலப்பாளையம் என்னும் இடத்தில் தங்கிநின்று, ஈரோடு மாவட்டத்திலுள்ள 'சிக்சிக்மா சொலீயுசன்ஸ்' என்னும் தனியார் நிறுவனத்தில் 1 வருடம் 'கிறாபிக்ஸ்' படித்தேன். இதன் தலைமை அலுவலகம் அமெரிக்காவிலுள்ள புளொறிடா மாநிலத்தில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

என்று கூறிய பெஸ்ரியன் தொடர்ந்தும் தெரிவித்ததாவது-

'சிக்சிக்மா சொலீயுசன்ஸ்' நிறுவனத்தில் எனது திறமையைப் பார்த்து, பகுதிநேர ஆசிரியராக மாதம் எண்ணாயிரத்து ஐந்நூறு இந்திய ரூபா சம்பளத்தில் நியமனம் பெற்று ஆறு மாதம் சேவையாற்றினேன்.

இந்தநிலையில் எனது குடும்பத்தைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் எமது தாயக மண்ணுக்கு வந்து சேர்ந்தனர். என்னோடு இருந்த பெற்றாரும் இங்கே வர நேர்ந்ததால், நானும் தாயகமான குருநகர் மண்ணுக்கு வந்து சேர்ந்தேன்.

அங்கே கற்றிருந்த கணினி வேலைகளை ஒருவருடகாலம் எமது வீட்டில் வைத்துச் செய்து வந்தேன். இப்பொழுது குருநகர், மவுண்கார் மேல்வீதி, 45 ஆம் இலக்கத்தில் 'பெஸ்ட் வொர்க்ஸ்' என்னும் கணினி சார்ந்த வேலைத் தலத்தைப் பெற்றார் நிறுவித்தந்துள்ளனர்.

எனக்கு நேரே மூத்த சகோதரன் சுவேந்திரனின் உதவியுடன் அந்த நிறுவனத்தை நடத்தி வருகிறேன். எனக்கு சகல விதத்திலும் உதவியாக இருப்பவர்கள் தகப்பனார் அல்பெட் சின்னத்துரை, தாயார் திரேசம்மா, சகோதர சகோதரிகள்தான்.

எனது வேலைத்தலத்தில் வீடியோ மிக்சிங், எடிட்டிங், போட்டோ டிசைனிங், புத்தக வடிவமைப்பு, நூல்கள் பதிப்பித்தல், கலண்டர் மாதிரிகள் மற்றும் சகல வாழ்த்துமடல்கள், வீடியோவை இறுவெட்டுக்கு மாற்றல், டி.வி.டிக்கு மாற்றல், கல்யாண புகைப்பட ஆல்பம் வடிவமைத்தல், கடை மற்றும் சினிமா விளம்பரம் செய்தல் ஆகிய வேலைகளைச் செய்து வருகிறேன்.

இவ்விதம் தெரிவித்த 'பெஸ்ட் வொர்க்ஸ்' உரிமையாளர் அல்பேட் பெஸ்ரியனிடமிருந்து விடைபெறும்போது அவரது தன்னம்பிக்கையுடன் கூடிய விடாமுயற்சியும், உழைப்பும் பிரமிக்கவைத்தது. மற்றையோர்க்கு முன்னுதாரணமாகவும் இருந்தது. ★

பட்டணைந்து

# இந்திய வெளியுறவு அமைச்சர் பதவி விலகமாட்டாராம்!

புதுடெல்கி—

இந்திய வெளியுறவு அமைச்சர் பதவியிலிருந்து விலகப்போவதில்லை யென நட்வர் சிங் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

நான் ஏன் எனது பதவியை ராஜினாமா செய்யவேண்டும். நான் பதவியில் நீடிக்கவேண்டுமா இல்லையா என முடிவுசெய்யும் அதிகாரம் பாரதிய ஜனதாவுக்கு இல்லை. நான் பதவியை ராஜினாமா செய்யமாட்டேன்.

நான் பதவியில் நீடிக்க வேண்டுமா? வேண்டாமா என்பதை முடிவு செய்யவேண்டியது பிரதமர்தான். வெளியுறவு அமைச்சராக நீடிப்பேன் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. ராஜினாமா செய்யவேண்டும் என்ற எண்ணம் இதுவரைக்கும் என் மனதில் தோன்றவில்லை. சோனியாவும், பிரதமரும் என்மீது முழு நம்பிக்கை வைத்துள்ளனர்.

நான் எனது பணியை சிறந்த முறையில் ஆற்றிவந்திருக்கிறேன். இப்போதும் அப்படித்தான் பணியாற்றிவருகிறேன்.

எனது அமைச்சர் பதவி பறிக்கப்பட்டாலோ, பதவி மாற்றம் செய்யப்பட்டாலோ எனக்கு அதனைப்பற்றிக் கவலையில்லை. நான் பொது வாழ்வில் உள்ளேன். அரசியலில் இதெல்லாம் சகஜம்தான்.

சமையல் அறையில் அடுப்படியில் இருந்துகொண்டு கை சுடுகிறதே என்று கவலைப்படமுடியுமா? அப்படிப்பட்டவர்கள் அடுப்படிக்கு வரக்கூடாது.

நான் வாழ்க்கையில் நன்றாக அனுபவித்துவிட்டேன். எனக்கு நல்ல குடும்பம் உள்ளது. நல்ல நண்பர்கள் இருக்கின்றனர். அவர்களுடன் வாழ்க்கையை உல்லாசமாகக் கழிப்பேன். எழுதுவது படிப்பது போன்றவற்றில் ஈடுபடுவேன். என்மீதும் காங்கிரஸ் மீதும் கூறப்பட்ட புகார்கள் ஆதாரமற்றவை. கெட்டபெயர்வந்துவிட்டதேஎன்று தான் சிறுகவலை உள்ளது.

சுவிஸ் ஏற்றுமதி நிறுவனத்துடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை. ஒரு பீப்பாய் எண்ணெயைக்கூட நான் பார்த்தது இல்லை. எண்ணெய் எப்படி வாங்கவேண்டும் என்றே எனக்குத் தெரியாது. எனது மகன் ஜகத் சிங்கும் ஹம்கான் நிறுவனத்தின் சேகலும் நண்பர்கள்தான். ஆனால், எண்ணெய் ஊழலில் அவர்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை.

இந்த விடயத்தில் காங்கிரஸ் கட்சியின் பெயருக்கு களங்கம் ஏற்பட்டிருப்பது சோனியாவுக்கு வருத்தம் தான். முன்கூட்டியே அறிவிப்புக் கொடுத்ததாக பால்வோல்கர் கூறுகிறார். எனக்கோ காங்கிரஸ் கட்சிக்கோ அவர் நோட்டீஸ் அனுப்பாதது ஏன்? காங்கிரஸின் பெயரைச் சீர்குலைக்க திட்டமிட்டே எங்களை இழுத்துள்ளனர்.

எனது மகன் ஜகத்சிங் ஜோர்தான் நாட்டு பெண்ணை திருமணம் செய்தவர். அந்தக் குடும்பத்தினருடன் சில நாட்கள் தங்கி இருக்கவே ஜகத் சிங் ஜோர்தான் சென்றுள்ளார். ஈராக் வழியாகத்தான் ஜோர்தான் செல்ல வேண்டும்.

ஈராக்கில் உள்ள அரசுமீது உலக நாடுகளுக்கு நம்பிக்கை இல்லை. இப்போதுள்ள அரசு கொடுத்த ஆவணங்களை வைத்து வோல்கர் இந்தக் குற்



றச்சாட்டுக்களைக் கூறியிருக்கிறார். ஐ.நா. குழுவுக்கு நோட்டீஸ் அனுப்புவதால் எங்களுக்குப் பெரிதாக 'எந்தப் பலனும் கிடைத்துவிடப்போவதில்லை எனத் தெரிவித்தார்.

# பின்லேடனின் நெருங்கிய கூட்டாளி பாகிஸ்தான் படையினரால் கைது!

இஸ்லாமாபாத்—

பாகிஸ்தானின் தெற்குப் பகுதியில் அல்கொய்டா தீவிரவாதிகள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் ஓசாமா பின்லேடனின் முக்கிய கூட்டாளி எனத் தெரியவந்துள்ளது.

பாகிஸ்தானின் தென்மேற்கு மாகாணமான பலுசிஸ்தானில் உள்ள குவெட்டா நகரில் கடந்தவாரம் 2 பேரை பாகிஸ்தான் பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் இருவரும் ஓசாமா பின்லேடனின் அல்கொய்டா தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஓசாமா பின்லேடனின் ஐரோப்பிய பிரதிநிதியாகச் செயற்பட்டவர் முஸ்தபா செட்மரியான் நாசர். தற்போது கைதுசெய்யப்பட்டவர்களில் நாசரும் ஒருவர் என பாகிஸ்தான் உளவுத்துறையினர் கூறுகின்றனர். கடந்த 2004 மார்ச் 11 ஆம் திகதி ஸ்பெயினின் மட்ரிட் நகரில் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்தது. இதில் 191 பேர் கொல்லப்பட்டதுடன், 1500 பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர் நாசர்.

இவரைப்பற்றிய தகவல் தெரிவித்தால் 56 கோடி ரூபா பரிசளிக்கப்படுமென அமெரிக்க அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது. இந்த நிலையில் அவரைத்தான் பாகிஸ்தானில் கைது செய்துள்ளனர். எனினும் இது குறித்து அதிகாரபூர்வ தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

# அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு எதிராக ஆர்ஜென்ரீனாவில் பெரும் போராட்டம்!

மார்டெபிளேட்டா—

ஆர்ஜென்ரீனாவின் மார்டெபிளேட்டா நகரில் வர்த்தக மாநாடு நடைபெறுகிறது. 2 நாள் நடக்கும் இந்த மாநாட்டில் பல்வேறு வர்த்தகக் கொள்கைகள் நிறைவேற்றப்படவுள்ளன:

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்களும் இதில் கலந்துகொள்கிறார்கள். ஜோர்ஜ் புஷ் ஏற்கனவே ஆர்ஜென்ரீனா வந்துவிட்டார்.

ஆனால், ஜோர்ஜ் புஷ் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ஜென்ரீனாவின் பலநகரங்களில் போராட்டம் நடைபெற்றுவருகிறது. இந்த மாநாட்டில் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் ஆர்ஜென்ரீனாவின் வர்த்தகத்தையும், இதர நாடுகளையும் பாதிக்கும் என்றும் - அமெரிக்காவுக்குத்தான் இது ஆதாயமாக இருக்கும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டோர் கூறுகின்றனர்.

மாநாடு நடக்கும் ஹோட்டலுக்கு அருகே எதிர்ப்பாளர்கள் பிரம்மாண்ட பேரணி நடத்தினார்கள். இதில் முன்னாள் உதை பந்தாட்ட வீரர் மரடோனாவும் கலந்து கொண்டார். வெனிசுலா ஜனாதிபதி சாவசும் இதில் கலந்து கொண்டார்.

இந்தப் போராட்டம் காரணமாக ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. கடற்கரைப் பகுதிகளில் கடலோரப்



பாதுகாப்பு படையினர் தீவிர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். சுற்றுலா ஹோட்டல்களிலும் தீவிர கண்காணிப்பு நடைபெறுகிறது.

# ஈராக் கிளர்ச்சிவாதிகளுக்கு எதிராக அமெரிக்க ராணுவம் படை நடவடிக்கை

க்தாத்—

சிரிய எல்லையோரமாக உள்ள ஈராக்கின் நிலப்பகுதியினுள் அல்கொய்டா கிளர்ச்சிவாதிகளுக்கெதிராக அமெரிக்க மற்றும் ஈராக் படையினர் பாரியளவிலான படை நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் படை நடவடிக்கையில் 2500 அமெரிக்க மரைன் படையினரும், ஆயிரம் ஈராக் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

அமெரிக்கப் படையினருடன் இணைந்து பாரியளவிலான ஈராக்



படையினர் படை நடவடிக்கையில் ஈடுபடுவது இதுவே முதல்முறையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படை நடவடிக்கையின் நோக்கம் அல்கொய்டாவுடனான வலையமைப்பை இல்லாதொழிப்பதே என அமெரிக்க இராணுவம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது படை நடவடிக்கை இடம்பெறும் பகுதியூடாக வெளிநாட்டு கிளர்ச்சிவாதிகளால் நிதி மற்றும் ஆயுதங்கள் ஈராக்கிற்குள் கடத்தப்படுவதாக அமெரிக்க இராணுவம் நம்புகின்றது.

கிளர்ச்சிவாதிகள் இந்தப் பகுதியூடாகத் தமக்குத் தேவையான ஆளணி வளத்தை மட்டும் கொண்டுவரவில்லை. மாறாக அவர்கள் தமது தலைவர்களையும், தமக்குரிய நிதிகளையும் கொண்டுவருவதாக அமெரிக்க இராணுவ அதிகாரி கேணலஸ்ரீபன் டேவிஸ் தெரிவித்தார்.




# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு; பெண் உட்பட அறுவர் உயிரிழப்பு

இஸ்லாமாபாத்—

பாகிஸ்தான் வடபகுதி மாகாணமான வசிறிஸ்தானில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் அறுவர் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

குண்டு தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களே, இந்தக் குண்டுவெடிப்பில் உயிரிழந்ததாக பாகிஸ்தான் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சௌகத் சுல்தான் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த அறுவரில் ஒருவர் பெண்ணாவார். இவர்கள் அனைவரும் வெளிநாட்டவர்கள் என நம்பப்படுகிறது. வசிறிஸ்தானின் வட பகுதியிலுள்ள மிரான்சா என்ற இடத்தில் உள்ள வீடொன்றில் இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது.

வசிறிஸ்தான் மாகாணத்தின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் கடந்த இரண்டு வருடங்களாக இடம்பெற்றுவரும் மோதலில் 250 பாகிஸ்தான் படையினரும், நூற்றுக்கணக்கான கிளர்ச்சிவாதிகளும் கொல்லப்பட்டனர்.

# விண்வெளிக்குச் செல்லவுள்ள நான்காவது சுற்றுலா பயணி!

டோக்கியோ—

அமெரிக்கா, ரஷ்யா உட்பட பல்வேறு நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆய்வுகூடத்தை அமைத்துள்ளன. இந்த ஆய்வுகூடத்துக்கு அவ்வப்போது ரொக்கெட்டில் விண்வெளி நிபுணர்களையும் தேவையான தளபாடங்களையும் அனுப்பிவருகின்றன.

இந்த ஆய்வுகூட பணிகளுக்கான செலவுகளை சமாளிக்க அவ்வப்போது ரொக்கெட் செல்லும்போது சுற்றுலா பயணிகளையும் கூடவே அழைத்துச் செல்கிறது. கோடிக் கணக்கில் இதற்காக அந்த விண்வெளி சுற்றுலா பயணிகளிடமிருந்து பணம் வசூலிக்கப்படுகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த கோடீஸ்வரர் உட்பட இதுவரை 3 சுற்றுலா பயணிகள் விண்வெளிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

விண்வெளிக்குச் செல்லவிருக்கும் 4 ஆவது சுற்றுலா பயணி ஒரு ஜப்பானியர். ஓவியரான இந்தக் கோடீஸ்வரரின் பெயர் டெய்சுகி எனோமோட்டா (வயது 34) இதற்காக அவர் 5 கோடி டொலர் பணம் கொடுக்கிறார்.

அடுத்த ஆண்டு சர்வதேச விண்வெளி ஆய்வுகூடத்துக்கு ரொக்கெட் செல்லும்போது விண்வெளி நிபுணர்களுடன் இவரும் செல்லவுள்ளார்.

# பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் வன்செயல்கள் தொடர்கின்றன

பாரிஸ்—

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் குடியேறியுள்ள வட ஆபிரிக்க இளைஞர்கள் தொடர்ந்து 8 ஆவது நாளாக கலவரத்தில் ஈடுபட்டுவருகின்றனர். கடந்த வியாழக்கிழமை ஒரே இரவில் 150 கார்களுக்கு அவர்கள் தீ வைத்தனர். ஒரு பாடசாலையும் தீக்கிரையானது.

பாரிஸ் நகரின் புறநகர் பகுதிகளில் வடக்கு ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் குடியேறி உள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள். அவர்களின் வாரிசுகளுக்கு வேலை கிடைக்காததாலும், பிரான்ஸ் சமூகத்தினர் மத்தியில் அங்கிகாரம் கிடைக்காததாலும் வெறுப்படைந்த இளைஞர்கள் கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 8 நாட்களாக இரவு நேரத்தில் கலவரம் நடக்கிறது. கலவரக்காரர்கள் கார்களுக்குத் தீ வைப்பது, பொலிஸாருடன் சண்டை போடுவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு பாரிஸ் நகரின் வடகிழக்குப் பகுதியில் கலவரம் வெடித்தது. ஓரே இரவில் 150 கார்களுக்கு தீ வைத்தனர்.

கலவரத்தை அடக்குவதற்காக ஆயிரம் கலவரத் தடுப்புப் பொலிஸார் அந்தப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இருந்தபோதிலும் கலவரக்காரர்கள் 2 புடவைக்கடைக்கும், ஒரு பஸ் நிலையத்துக்கும், ஒரு ஆரம்பப் பாடசாலைக்கும் தீ வைத்தனர்.

கடந்த வியாழக்கிழமை முதல் முறையாக தலைநகர் பாரிஸுக்கு வெளியேயும் கலவரம் பரவியது. டிஜோன், ரூயன், பவுச்சஸ், டூரோன் ஆகிய பகுதிகளில் கலவரம் ஏற்பட்டது.

கலவரம் தொடர்பாக இதுவரை 143 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தக் கலவரம் காரணமாக கனடா பயணத்தை பிரதமர் வில்லேபின் ரத்துச்செய்தார். உள்துறை அமைச்சர் சர்கோசி பாகிஸ்தான் செல்வதைக் கைவிட்டார்.

இதனை அடக்குவதில் பிரதமர் வில்லேபினுக்கும், உள்துறை அமைச்சர் சர்கோசிக்கும் இடையே கருத்து



வேறுபாடு ஏற்பட்டுள்ளது. ஆளும் கட்சியே இருகூறாகப் பிரிந்துவிட்டது.

இந்தக் கலவரத்தைத் தொடந்து உள்துறை அமைச்சர் நிகோலஸ் சர்கோசியை எதிர்த்தரப்பினர் கடுமையாகக் கண்டித்துள்ளனர்.

சர்கோசி கலவரத்தை அடக்கும் அதே நேரத்தில், சிறுபான்மையினருக்கு ஆதரவான திட்டங்களையும் அறிவித்தார். மசூதிகள் கட்டுவதற்கு நிதி திரட்ட உதவியும் செய்கிறார். இதை பழைமைப் போக்கில் நம்பிக்கை கொண்டவர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

# தண்ணீர் பற்றாக்குறையை நீக்க சீன அரசாங்கம் கடும் போராட்டம்!

பீஜிங்—

சீனாவில் கடுமையான தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. சீனாவிலிருந்து வெளிவரும் சீன டெய்லி என்ற பத்திரிகையில் இதுபற்றி கூறப்பட்டுள்ளதாவது -

உலக சராசரியில் கால் பங்கு என்ற அளவில்தான் சீன மக்கள் ஒவ்வொருவருக்கும் தண்ணீர் கிடைக்கிறது. இந்த அளவு மேலும் குறையக்கூடும். சீனாவில் பரவலாக நிலவும் வரட்சி, சுற்றுச்சூழல் மாசுபடுதல், அசுரத்தனமான பொருளாதார வளர்ச்சி மற்றும் கழிவுகளால்தான் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மற்றைய நாடுகளை விட சீனாவில் தண்ணீர் பற்றாக்குறை கடுமையாக உள்ளது. சீனாவின் அவசர தேவையாக உள்ளது தண்ணீர்.

இந்தப் பிரச்சினையை தாமதிக்காமல் செய்துமுடிக்கவேண்டும் என்று சீன நாட்டின் கட்டுமானத்துறை உதவி அமைச்சர் கியூபாவோசிங் பாங்கிங் கூறியுள்ளார்.

சீன நகரங்களில் உபயோகிக்கப்பட்ட நீரில் பாதியளவு தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் குடிநீராக விநியோகிக்கப்படுகிறது. இன்னும் ஐந்து ஆண்டுகளில் இதுபோன்று நீர் சுத்திகரிப்பு 60 முதல் 70 சதவீதம் ஆக அதிகரிப்பதற்கு அரசு நிர்ணயித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வரவு - செலவுத் திட்ட விபரம் செவ்வாயன்று அமைச்சரவைக்கு

கொழும்பு —

அரசால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவுசெலவுத் திட்டம் குறித்து - அமைச்சரவைக்கு அறிவிக்கும் விசேட அமைச்சரவைக் கூட்டம், எதிர்வரும் 8ஆம் திகதி முற்பகல் நடைபெறுமென நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

கடந்த மூன்றாம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே நிதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இதுவரை வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிக்கும் வேலைத்திட்டங்கள் பெருமளவில் முடிவடைந்துள்ளதாகவும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், அன்றைய தினம் முற்பகல் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தின்போது இது குறித்து தெரிவிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# நிதியமைச்சர் ஐ.தே.கவிலா? மறுக்கிறது அரசாங்க தரப்பு!

கொழும்பு —

நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கியிருப்பதால் - அவர் ஐ.தே.கவில் இணைந்துவிட்டதாகக் கொழும்புச் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், இந்தச் செய்திகளை அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா நிராகரித்துள்ளார்.

எதிர்வரும் 8 ஆம்திகதி வரவு செலவுத்திட்ட அறிக்கையைத் தாக்கல் செய்வதற்கான இறுதிக்கட்டப் பணிகளில் நிதியமைச்சர் சரத் அமுனுகம ஈடுபட்டிருப்பதாலேயே தேர்தல் நடவடிக்கையில் இருந்து ஒதுங்கியிருப்பதாகவும் -

ஐ.தே.கவே வதந்திகளைப் பரப்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கேணல் மீடின் கொலையுடன் பிரதி அமைச்சருக்கு தொடர்பு

கொழும்பு —

இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரி கேணல் ரிஸ்லி மீடினின் கொலையுடன் பிரதி அமைச்சர் ஒருவருக்குத் தொடர்பிருப்பதாக கொழும்பில் வெளியாகும் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் கடந்த பொதுத் தேர்தலின்போது ஜே.வி.பியுடன் இணைந்து செயற்பட்ட கம்பஹா பிரதேச துறவியொருவர் மீதும் சந்தேகம் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தக் காவித்துறவி தற்போது தலைமறைவாகியிருப்பதாகவும் தெரியவருகிறது. ரிஸ்வி மீடினின் கொலை சம்பந்தமாக மீன் வியாபாரியான சமலி என்பவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். மற்றொரு சந்தேக நபரான ஜஸ் மஞ்சு என்பவர் தேடப்பட்டு வருகிறார்.

### மீடின் கொலை....

மீடின் கொலை தொடர்பாக விசாரணைகள் நடைபெறுவதற்கு முன்பாகவே எம்மீது குற்றம் சாட்டப்படும் நிலையில் நாம் அமைதியாக இருப்பதுதான் சரியானது. அரசாங்கம் என்ன கூற விரும்புகிறதோ கூறட்டும்.

நாம் உத்தியோக பூர்வமாக இது தொடர்பிலானவற்றை மறுத்தால், விடுதலைப்புலிகள் வழமையாக இப்படித்தான் மறுப்பார்கள் என்று அரசாங்கம் பதிலளிக்கும். ஆனால் நாம் எதுவும் கூறாதிருப்பதே சரியானது என அவர் மேலும் தெரிவித்தார்.

### வடக்கு கடற்....

தற்பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த தகவல்கள் தெரிவித்தன.

### இராணுவ ...

பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற பகுதியை படையினரும் பொலிஸாரும் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியதுடன் வீதிகளும் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டன.

உயிரிழந்த இளைஞனின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி தேர்தல்..

தொடர்ந்தும் நோர்வே அரசு ஈடுபடவேண்டும் என்று விடுத்த வேண்டுகோளையடுத்தே நாம் தொடர்ந்தும் போர் நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறோம்.

இரு தரப்பினருக்கும் இடையிலான சமாதான முயற்சிகளின் ஏற்பாட்டாளராக நோர்வே தொடர்ந்தும் கடமையாற்றும். சமாதான முயற்சியில் நோர்வேயின் ஆரம்ப நடவடிக்கையில் எந்தவித மாற்றமும் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அரசும் விடுதலைப் புலிகளும் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பார்கள். இதன்போது நோர்வே அரசு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான ஏற்பாட்டாளராகச் செயற்படும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

### துணைப்படை...

நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

போர் நிறுத்த ஒப்பந்த சரத்து 1.8 இன்படி அனைத்து தமிழ் துணைப் படை ஆயுதக் குழுக்களும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 30 நாட்களுக்குள் வெளியேற்றப்படவேண்டும். தற்போது அமைதி முயற்சிக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அந்த ஆயுதக் குழுக்கள் இயங்கி வருவதால் அவர்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

கிழக்குப் பிரதேசத்தில் படையினருடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களால், ஜனாதிபதி தேர்தலின்போது பாரிய வன்முறைகள் நடைபெறக் கூடும் என்று, பவ்ரல் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவினர் எச்சரித்துள்ள நிலையில், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் இந்த வேண்டுகோளை விடுத்திருப்

# தபால் மூல வாக்களிப்பை 2000 பேர் கண்காணிப்பர்

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பை நாளையும், நாளை மறுதினமும், வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள்20 பேர் உட்பட 2000 கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பை மேற்கொள்வரென பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸ்லி றொட்றிக்கோ தெரிவித்தார்.

பொலிஸ், இராணுவம், போக்குவரத்துச் சபை மற்றும் கல்வியமைச்சுடன் தொடர்புடைய நிறுவனங்கள் குறித்து இதன் போது விசேட கவனம் செலுத்தப்படும்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் தினமன்று வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் 2 ஆயிரம் பேரையும் உள்நாட்டு கண்காணிப்பாளர்கள் 20 ஆயிரம் பேரையும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# ரணில் விக்கிரமசிங்கவுக்கும் குண்டு துளைக்காத கூண்டு!

கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் குண்டு துளைக்காத கூண்டுப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் உயிருக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளதாக படையினர் தெரிவித்துள்ளதையடுத்து, கடந்த வியாழனிலிருந்து குண்டு துளைக்காத கண்ணாடிக் கூண்டினை ரணில் பயன்படுத்துகின்றார்.

கடந்த வியாழன் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் குண்டு துளைக்காத கூண்டிலிருந்து அவர் உரையாற்றினார்.

பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ரணிலுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்து தெரிவித்திருந்ததுடன், ரணில் கலந்துகொள்ளும் கூட்டங்களைக் குறைத்துக்கொள்ளுமாறும் கேட்டிருந்தார்.

இதனையடுத்தே ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் குண்டு துளைக்காத கண்ணாடிக் கூண்டைப் பயன்படுத்தி வருகிறார்.

இதேவேளை இதுவரை 3 பாதுகாப்புக் கூண்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அவை பாதுகாப்புப் படையினரின் ஆலோசனைகளுக்கமைய தேவையான இடங்களில் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### அலரி மாளி....

இந்த விசேட தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் தேடுதல் நடவடிக்கையின் பின்னர் எந்தவிதமான குண்டுகளும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### விசேட அதிரடிப்படைக்கு...

பயற்சிகள் குறித்து ஆராயப்படவுள்ளதாகவும் குறிப்பாக, தற்போது அதிகரித்துவரும் வன்செயல்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக அமெரிக்க அரசு வழங்கவுள்ள யுத்த மூலோபாயங்களை செயற்படுத்தவும் உடன்பாடு காணப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெகே தெரிவித்தார்.

தற்போது அமெரிக்காவால் வழங்கப்படும் பயிற்சிகளுக்கு மேலதிகமாக இந்தப் பயிற்சியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக விசேட அதிரடிப்படையின் கட்டுக்குருந்த பயற்சி நிலையத்தை பயன்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த அமெரிக்க பிரதிநிதிகள் குழுவினர் கட்டுக்குருந்த பயிற்சி நிலையம் சென்று பார்வையிட்டதுடன் யுத்தப் பயிற்சிக்கு தேவையான வளங்கள் குறித்தும் ஆராய்ந்துள்ளனர். (தே)

### 12 அமைச்சர்களுடன்...

கட்சிக்கும் நெருங்கிய தொடர்புள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டிலேயே இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

எதிர்வரும் தேர்தலில் மிகவும் இரகசியத் திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்கு இந்த அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோது இணக்கம் கண்டுள்ளனர். அந்த இணக்கப்பாடு என்ன என்பது பற்றி இதுவரை வெளியிடப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அரசாங்கமொன்றை அறிவிக்க இந்த அமைச்சர்கள் இணங்கியுள்ளனர்.

காபந்து அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள்.

ஜனாதிபதியாகப் பதவியேற்று காபந்து அரசை அறிவித்து 24 மணித்தியாலத்துக்குள் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தலையும் நடத்த ரணில் விக்கிரமசிங்கவும் இந்த அமைச்சர்களும் இணக்கம் கண்டுள்ளதாகவும் கூறப்

### ஜனாதிபதி...

சந்திரிகா தனது இந்த உரையின் போது கருத்துக்களை வெளியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியலமைப்பின்படி தேர்தல் முடிவுகள் வெளியானதுடன் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைகிறது. எனினும், புதிய ஜனாதிபதி பதவியேற்று கடமைகளைப் பொறுப்பேற்கும் வரை பதில் ஜனாதிபதியாக செயற்படுவதற்கு சட்டத்தினூடாக அதிகாரம் உள்ளது.

சந்திரிகா தனது பதவியிலிருந்து கலந்துகொள்ளும் உத்தியோக பூர்வ வைபவம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடைபெறவுள்ளது.

தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் சிறிது காலத்துக்கு வெளிநாட்டுப் பயணம் ஒன்றை சந்திரிகா மேற்கொள்ளவுள்ளார். அதன் பின் நாடு திரும்பி முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அலுவலகத்தைத் திறந்து அங்கிருந்து தனது எதிர்கால நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ளவுள்ளார் என்று ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன

இரகசியத் திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்கு இந்த அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோது இணக்கம் கண்டுள்ளனர். அந்த இணக்கப்பாடு என்ன என்பது பற்றி இதுவரை வெளியிடப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியானதையடுத்து காபந்து சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள்.

ஜனாதிபதியாகப் பதவியேற்று காபந்து அரசை அறிவித்து 24 மணித்தியாலத்துக்குள் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தலையும் நடத்த ரணில் விக்கிரமசிங்கவும் இந்த அமைச்சர்களும் இணக்கம் கண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கிழக்குப் பிரதேசத்தில் படையினருடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களால், ஜனாதிபதி தேர்தலின்போது பாரிய வன்முறைகள் நடைபெறக் கூடும் என்று, பவ்ரல் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவினர் எச்சரித்துள்ள நிலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் இந்த வேண்டுகோளை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அரசியலமைப்பின்படி தேர்தல் முடிவுகள் வெளியானதுடன் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைகிறது. எனினும், புதிய ஜனாதிபதி பதவியேற்று கடமைகளைப் பொறுப்பேற்கும் வரை பதில் ஜனாதிபதியாக செயற்படுவதற்கு சட்டத்தினூடாக அதிகாரம் உள்ளது.

சந்திரிகா தனது பதவியிலிருந்து ஓய்வுபெறுவதற்கு முன்னதாக பெற்றதும் சிறிது காலத்துக்கு வெளிநாட்டுப் பயணம் ஒன்றை சந்திரிகா மேற்கொள்ளவுள்ளார். அதன் பின் நாடு திரும்பி முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அலுவலகத்தைத் திறந்து அங்கிருந்து தனது எதிர்கால நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ளவுள்ளார் என்று ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

---

## ரணிலின்...

எங்கள் மக்களது அரசியல் எழுச்சி என்பது முன்பு எப்போதையும் விட உச்ச நிலையில் இருக்கிறது. இந்தச் சூழலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

மகிந்த ராஜபக்சவினது வாக்குறுதிகள் இதுவரை வரலாற்றின் உச்ச சாதனையை எட்டிவிட்டன. எவரும் வழங்காத வாக்குறுதிகளை அவர் வழங்கி விட்டார். இனிமேல் வாக்குறுதிகள் அளிக்கப்போகிறவர்களுக்கு பெரும் துன்பம்தான். ரணில் கூட என்ன சொல்வது என்று தெரியாத நிலையில் ஒட்டு மொத்தமாக அனைத்து வாக்குறுதிகளையும் மகிந்த ராஜபக்ஷவே வழங்கிவிட்டார்.

இங்கே ஒரு இக்கட்டான நிலையில் - அங்கே சிங்கள தேசத்தில் தேர்தல் நடைபெறுகிறது. சிங்கள மக்களை ஏய்த்து ஏய்த்து சொல்லிச் சொல்லி இவ்வளவு ஏமாற்றியதற்குப் பின்னால் சொல்வதற்கு என்ன இருக்கிறது என்று தெரியாமல் வாய்க்கு வந்ததையெல்லாம் வாக்குறுதிகளாகச் சொல்லுகின்ற அளவுக்கு சிங்கள தேசத்து அரசியல் தரம் தாழ்ந்து போய்க் கிடக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கும் தமிழ் மக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இரண்டு வேட்பாளர்களுமே சிங்கள மக்களை மையமாக வைத்துத்தான் சிந்திக்கிறார்கள். தன்னுடைய வாக்கு வங்கி சிக்கலாக இருப்பதால்தான் ரணிலும் வேறு வழியின்றி தமிழ் மக்கள் பற்றியும் பேசுகிறார். ஆனால், இருவருமே சமமான நிலையில் உள்ளவர்கள்தான். எவருடைய வாக்குவங்கியை மற்றவர் அபகரிக்கிறாரோ அதன் அடிப்படையிலேயே வெற்றி தீர்மானிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டு வருகிறது.

இனவாத, பேரினவாதக் கருத்துக்கள் நிரம்பிய நிலையில் சிங்கள மக்களிடத்திலே மகிந்தவின் வாக்குவங்கி அமைந்திருக்கிறது. அதனால் வேறு வழியின்றி தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக ரணில் பல்வேறு வேடங்களைப் போட்டுவருவது எமது மக்களுக்கு நன்கு தெரி யும்.

தமிழ் மக்களது பிரச்சினைகள் குறித்து இந்தத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் இம்மியளவும் கருத்தில் எடுக்கவில்லை என்பதுதான் எமது கருத்து.

சிங்கள மக்களது பிரச்சினை வேறு. தமிழ் மக்களது பிரச்சினை வேறு.

சிங்கள மக்களது பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய பொறுப்பு நிச்சயமாக சிங்களத் தலைவர்களுக்கு உண்டு. ஜே.வி.பிக்கு நிறைவேறாத ஆசைகள் நிறைய உண்டு. அவர்களது எண்ணங்கள் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாமல் குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடக்கின்றன.

அதனால் தவியாய்த் தவித்து துடியாய்த் துடித்து என்ன செய்தேனும் பதவியைக் கைப்பற்றி தங்களது ஆட்சியைத் திடப்படுத்தி தங்களுடைய மக்களுக்கு ஏதேனும் செய்ய வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். அதற்காக என்னென்ன வழிகளில் பயணிக்க முடியுமோ அந்தந்த வழிகளிலெல்லாம் அவர்கள் பயணிக்கிறார்கள்.

இந்தத் தேர்தலின் நடப்பும், நடைமுறைகளும் தமிழ் மக்களுக்கு எதுவித சம்பந்தமும் இல்லையென்பதாகத்தான் இருக்கிறது. இந்தத் தேர்தல் சர்வதேச சமூகத்துக்கும் ஒரு செய்தியைச் சொல்கிறது. தமிழீழ மக்களுக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதுதான் அந்தச் செய்தியாகும்.

ஜனாதிபதித் தேர்தல் பற்றி அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்கச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிரேஜிடம் கேள்வி கேட்டால் - விடுதலைப்புலிகள் கூட்டாட்சி அமைப்புக்கு ஒத்துக்கொள்ள வேண்டும். ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்குச் செல்லவேண்டும் என்று கூறுகிறார்.

இதிலிருந்து ஜனாதிபதித் தேர்தலுக்கும் தமிழ் மக்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதைத்தான் ஆர்மிரேஜ் போன்றவர்களின் கருத்துகள் வெளிப்படுத்துகின்றன.

இந்தத் தேர்தல் தமிழ்மக்களுக்கு முக்கியமானதாக அமையப்போகிறது. இந்தத் தேர்தலினூடாகத் தமிழ் மக்கள் தெரிவிக்கப்போகின்ற முடிவு என்பது உடனடியாக உலகத்துக்குத் தெரியப்போகிறது. இதை உலகம் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கிறது.

ஆகவே, எங்களுடைய மக்கள் இரண்டு வேட்பாளர்களின் வரலாற்றைப் புரிந்துகொண்டு அதற்கேற்ற வகையில் தங்களது செயற்பாட்டை மேற்கொண்டு தமது முடிவை சர்வதேச சமூகத்துக்கு தெரிவிக்கவேண்டும்.

எம் மக்கள் என்னமாதிரியான பதிலளிப்பார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அது தொடர்பாக நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. எம் மக்களுடைய அரசியல் முதிர்ச்சி இந்தத் தேர்தலில் வெளிப்படும் என்று நாம் நம்புகிறோம்.

ரணில் பெரிய வேடமிட்டுக் கொண்டிருக்கிறார். இதுபற்றி எமது மக்கள் தெளிவாக இருத்தல்வேண்டும்.

ரணில் அண்மைக்காலமாகப் பேசிவருவதன் பின்னால் உள்ள நச்சுக் கருத்தை தமிழ்மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழ்மக்களைப் போரில் வெல்ல முடியாது என்பது ரணிலுக்குத் தெரியும். அதனால் தந்திரத்தால் வெல்ல நினைக்கிறார்.

தாம் ஜனாதிபதியாகத் தேர்வுசெய்யப்பட்ட பிறகு புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து ஒரு அரைகுறையான தீர்வை பல்வேறு வடிவங்களில் சமர்ப்பித்து மிக நீண்ட காலத்துக்கு இந்தப் போராட்ட முதிர்ச்சியிலிருந்தும், அனுபவத்திலிருந்தும் புலிகளைப் பின்தள்ளவைத்து புலிகளின் நாட்டுப்பற்று தொடர்பிலான இலக்கை விலக்கச் செய்கிற முழு தந்திரோபாய முயற்சியில் ரணில் ஈடுபட்டுள்ளார்.

இது சாதாரண மக்களுக்குப் புரிவது கடினமாக இருக்கலாம். உற்று நோக்கிப் பார்த்தால் மகிந்த ராஜபக்ஷ சொல்வதைத்தான் ரணில் சொல்கிறார். மகிந்தர் வெளிப்படையாகச் சொல்கிறார். ஆனால், ரணில் மறைமுகமாக - பூடகமாகச் சொல்கிறார். இருவரும் சொல்வதில் எந்த வேறுபாடும் இல்லை.

இரு கட்சிகளுமே ஒரு கட்சியின் இரண்டு கிளைகள்தான். இதை தமிழ்மக்கள் புரியவேண்டும்.

அன்று பண்டாரநாயக்கவின் செயற்பாடு எமது விடுதலை இயக்கத்தின் பிறப்புக்கு காரணமாக இருந்தது. இன்று மகிந்தவின் செயற்பாடு எமது போராட்டத்தின் வெற்றிக்குக் காரணமாக இருக்கும்.

எவ்வாறு 1956 இற்குப் பிறகு இந்தத் தீவு இரத்தத்திலே குளிப்பதற்குச் செய்யப்பட்டதோ அதுபோலவே மகிந்தரின் செயற்பாடும் இந்தத் தீவில் சிங்களத் தீவானது இரத்தத்தில் குளிப்பதற்கும், தமிழ்த் தீவு விடுதலை பெறுவதற்குமான வழியைக் கொடுக்கும் என்று தான் கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.11.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.